வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=


# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 29.08.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 241 பக்கங்கள் : 12





## சித்துப்பாத்தியில் நேற்றுடன் 177 எலும்புக்கூடுகள் கண்டறிவு

- இ. ராஜ்குமார், த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக. 29

அரியாலை மனிதப் புதைகுழியில் நேற்று வியாழக்கிழமை நடந்த அகழ்வில் 8 மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன. இதேநேரம், 6 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்டத்தின் மூன்றாவது பகுதியாக 36ஆவது நாளாக நேற்று அகழ்வு பணிகள் நடைபெற்றன.

ஏற்கனவே, 169 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்ட நிலையில் நேற்றைய தினம் 8 எலும்புக் 11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி வழக்கு ஒத்திவைக்கப்பட்டது!

- ச. தவசீலன் -

முல்லைத்தீவு, ஒக. 29

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு மீண்டும் விசாரணைக்காக நவம்பர் 6 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நீதிவான் த. பிரதீபன் முன்னிலையில் நடந்த வழக்கு விசாரணையின்போது, புதைகுழியில் இருந்து மீட்கப் பட்ட சான்று பொருட்கள் 11

## இ.போ.ச. தொழிற்சங்கங்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

### பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 29

வடக்கு, கிழக்கு பிராந்தியங்கள் உட்பட நாடு முழுவதும் இலங்கை போக்குவரத்து சபையினர் நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.



தனியார் பேருந்து சேவையினருடன் கூட்டு நேர அட்டவணையில் பேருந்துகளை இயக்கும் 11

## வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர் பணி இடைநீக்கம் செய்யப்படுவர்

### போக்குவரத்து பிரதி அமைச்சர்

கொழும்பு, ஒக. 29

அனைத்து போக்குவரத்து சபை சாரதிகளும் பணிக்கு திரும்ப வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் அவர்களை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் போக்கு வரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன 11

### எல்லை நிர்ணய குழுவை மீண்டும் நியமித்தால்

# மாகாண சபைகள் தேர்தலை 3 வருடங்களுக்கு நடத்தமுடியாது

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் எச்சரிக்கை




கொழும்பு, ஒகஸ்ட் 29

“எல்லை நிர்ணய குழு ஒன்றை மீண்டும் நியமித்தால் மாகாண சபைகள் தேர்தலை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நடத்த முடியாத நிலைமை ஏற்படும். தேர்தலை பிற்போடுவதற்காகவே எல்லை நிர்ணய குழு நியமிக்கப்படும்”, என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமை தொடர்பில் பவ்ரல் அமைப்பு நேற்று வியாழக்கிழமை கொழும்பில் நடத்திய விசேட கலந்துரையாடலில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “2017 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஒருசில தந்திரமான நடவடிக்கைகளால் மாகாண சபைகள் தேர்தல் பிற்போடப்பட்டது. இதனை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் 12 அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதன் பிரதிபலனாகவே மாகாண சபைகளின் பதவிக் காலத்தை குறைக்க முடியுமே தவிர அதிகரிக்க முடியாது என்று தீர்ப்பு கிடைத்தது.

பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உரிய நடவடிக்கைகளை அப்போது எடுக்கவில்லை - 11



## செல்வச்சந்நிதி ஆலயத்தில் 111 ஜோடிகளுக்கு திருமணம்

- த. பிரதீபன், சி. தில்லைநாதன் -

வடமராட்சி, ஒக. 29

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் முதன்முறையாக நேற்று வியாழக்கிழமை ஒரே நேரத்தில் 111 ஜோடிகள் திருமண பந்தத்தில் இணைந்தன.

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்டவர்களும் சிங்கப்பூரை சேர்ந்தவர்களுமான துரை தம்பதியரால் இந்தத் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. இந்தத் திருமணங்களுக்கான அரைப் பவுண் தாலி, கூறை சேலை மற்றும் இதர செலவுகளையும் 11

## ரணில் தொடர்ந்தும் மருத்துவமனையில்

கொழும்பு, ஒக. 29

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறக்கூடிய திகதி தொடர்பில் மருத்துவர்கள் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், முன்னாள் ஜனாதிபதி இனி ஒரு கைதி அல்ல. அவர் விரும்பினால் தனது தனிப்பட்ட மருத்து வரை அணுகவோ அல்லது தனியார் 11

## ‘நீதியின் ஓலம்’ போராட்டம் மூலம் 1.3 இலட்சம் ஒப்பங்கள் சேகரிப்பு!

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக. 29

தமிழ் மக்களுக்கான நீதி கோரிய “நீதியின் ஓலம்” கையெழுத்துப் போராட்டத்தில் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட கையொப்பங்களுடன் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாடு 11

## பட்டதாரிகள் ஆசிரியர்களாக விரைவில் ஆட்சேர்க்கப்படுவர்

### பிரதமர் ஹரிணி அறிவிப்பு

கொழும்பு, ஒக. 29

வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரியர்களாக ஆட்சேர்ப்பு செய்வதில் தாமதத்துக்குக் காரணமான உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள 4 வழக்குகளின் நீதித்துறை நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தில் இருக்கின்றன என்று கல்வி, உயர் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். 11

## சகல அரச நிறுவனங்களிலும் கைரேகை பதிவு கட்டாயம்!

கொழும்பு, ஒக. 29


அனைத்து அரச நிறுவனங்களிலும் கைரேகை பதிவு இயந்திரங்கள் நிறுவப்படவுள்ளன என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.


பல அரச பணிமனைகளில் ஏற்கனவே கைரேகை பதிவு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால், பல நிறுவனங்கள் இன்னும் இந்த 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் ஆவணி சதுர்த்தி நாளான நேற்று முன்தினம் விநாயக பெருமான் உள்வீதி, வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்த தருணம்...!

(படங்கள் : ஐ. சிவசாந்தன்)

# முல்லை. மருத்துவமனைக்கு மெத்தைகள் அன்பளிப்பு!

முல்லைத்தீவு, ஓக. 29

முல்லைத்தீவு மாவட்ட பொது மருததுவமனை நோயாளர் விடுதிகளுக்கு ஒருதொகை மெத்தைகள் வழங்கி வைக்கப் பட்டுள்ளன.

கிளீன் சிறிலங்கா திட்டத்தின் கீழ் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் பெரண்டினா நிறுவனத்தின் அனுசரணையில் கேப்பாபிலவு கிங்ஸ்ரார் இளைஞர் கழகத்தின் ஒழுங்கு படுத்தலில் இந்த மெத்தைகள் மூன்றாம் கட்டமாக நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

மருத்துவமனையின் உதவி பணிப்பாளரிடம் குறித்த மெத்தைகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ். மஞ்சுளாதேவி, முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சம்மேளன உதவி பணிப்பாளர் எஸ். சுந்தரலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட தேசிய சம்மேளனத்தின் பிரதிநிதி நே. சங்கீதன், பெரண்டினா நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் இளைஞர் கழகங்கள், மருத்துவமனையின் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# 26ஆவது நாளாகவும் மன்னாரில் போராட்டம்

மன்னார், ஓக. 29

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவன வீர்ப்பு போராட்டம் நேற்று 26ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் விடத்தல்தீவு மாதர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மன்னார் நகர சுற்றுவட்டத்தில் நடைபெறும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும்வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ஐ)



# மாவட்ட ஒதுக்கீட்டு முறைமையிலேயே ஆசிரியர் நியமனம் வழங்கவேண்டும்

## வவுனியா ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, ஓக. 29

வன்னி பிராந்தியத்தில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன், "இனி மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்", என்றும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ரவிகரன் முன்வைத்த இந்தத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் போது, மேலும் கருத்து வெளியிட்ட அவர் தெரிவித்தவை வருமாறு,

வன்னி பிராந்தியத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் அதிகளவில் பற்றாக்குறைகள் காணப் படுகின்றன. இதனால் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களின் கல்வியில் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்போது வடக்கு மாகாணத்துக்கென போட்டித் தெரிவுகளை நடத்தி மாகாண ஒதுக்கீட்டு முறையில் நியமனங்களை வழங்குவதாலேயே வன்னி பிராந்தியம் இவ்வாறு பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவேதான், மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் போட்டி தெரிவுகளை நடத்தி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தோம். அந்தவகையில் மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் போட்டித் தெரிவுகளை நடத்தி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமென இந்த வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# சர்வதேச நீதி கோரிய போராட்டம் தமிழர்கள் தேசமாக அணி திரள்க!

## யாழ். பல்கலை ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 29

சர்வதேச நீதி கோரிய மாபெரும் போராட்டத்தில் வடக்கு கிழக்கில் இருந்து தமிழர் தேசமாக அனைவரும் அணி திரள வேண்டும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முன்தினம் யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு, கிழக்கு தமிழர் தாயக பகுதியிலே யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு தற்காலம் வரையிலும் பல்வேறுபட்ட ஆக்கிரமிப்புகளுக்கு தமிழர் தாயகமானது முகம் கொடுத்து வருவதுடன் அந்த காலப்பகுதியிலே எமது பல உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அத்துடன், தொடர்ச்சியாக இன்றளவும் அவர்களது உறவினர்கள் அவர்களை தேடிக் கொண்டிருக்கின்றனர்.

இதில், நிறைய தாய்மார்கள் இறந்தும்கூட இருக்கின்றனர். இன்றும் நம் மக்கள் வாழ்கின்ற நிலப்பகுதியில் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புகள், சிங்கள பௌத்தமயமாக்கல், தமிழரின் பூர்வீக காணிகள் விடுவிக்கப்படாமை என அதிகார ரீதியாக தமிழ் மக்கள் தொடர்ந்தும் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வருகின்றமையானது எங்கள் மக்களுக்கான நீதி இந்த நாட்டில் தொடர் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றமையையே குறிக்கின்றது.

தமிழ் மக்கள் தங்கள் தாயக பகுதியில் அரசியல், கலாசார, பொருளாதார ரீதியாக ஒடுக்கப்படுவதையும் எமக்கான நீதி மறுக்கப் படுவதையும் நாம் உரத்துச் சொல்வதே போராட்டங்களின் தார்மீக நோக்கமாகும்.

வீதி எங்கும் தங்கள் பிள்ளைகளின் புகைப் படங்களுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதுவித நீதியுமற்று போராடி வருகின்றனர். யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்தும் இன்றளவும் நீதிக்கான தவிப்புகள் தணியப்படவில்லை. அவர்களுக்கான நீதி மாறி மாறி வரும் எந்த ஒரு அரசாங்கத்தாலும் வழங்கப்படவில்லை - வழங்கப்படாது.

இதனாலேயே வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை அன்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் தங்கள் பிள்ளைகளை தேடி சர்வதேச நீதி விசாரணை கோரி போராட முனைந்துள்ளனர்.

வடக்கில் கிட்டுப் பூங்காவிலிருந்து செம்மணி வரையிலும் கிழக்கில் கல்லடி பாலத்திலிருந்து காந்தி பூங்கா வரையிலும் சர்வதேச நீதிக்கான மாபெரும் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர். யாழ். பல்கலைக்கழக மாணவர்களாக அவர்களது போராட்டத்துக்கு முற்றுமுழுதான ஆதரவை வழங்குவதுடன் பக்கபலமாகவும் இருப்போம். வடக்கு, கிழக்கு வாழ் தமிழர் தேசமாக போராட்ட களத்துக்கு நாங்கள் அணி திரள வேண்டும் - என்றனர். (அ-ஐ)

# மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஓக. 29

மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று வியாழக் கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் கடந்த 20ஆம் திகதி ஆரம்பமானது. எண்ணெய் காப்பு சாத்துதல் கடந்த 25ஆம் திகதி தொடக்கம் நேற்று முன் தினம் வரை நடைபெற்றது.

தொடர்ந்து, நேற்று அதிகாலை முதல் விசேட பூசைகள் நடை பெற்று சுந்தர ஆஞ்சநேயருக்கு மகா கும்பாபிஷேகம் நிறைவடைந்தது. இதைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேக பூசைகள் நடைபெறவுள்ளன.

இந்த கும்பாபிஷேக நிகழ்வில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் பங்கேற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
29.08.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உலகத்தை உற்று நோக்குவது அவசியம்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வரி அறிவிப்பானது உலக அளவில் பல அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது. நண்பர்கள், எதிரிகள் என்னும் பார்வையின்றி அனைத்து நாடுகள் மீதும் ட்ரம்ப் நிர்வாகம் வரி விதிப்பை மேற்கொண்டிருக்கிறது. இதில், இந்தியாமீதான வரி அறிவிப்பு பலருக்கும் அதிர்ச்சி அளிக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. இந்தியா மூலோபாய ரீதியில் அமெரிக்காவின் நட்பு நாடு. குவாட் நாடுகளில் ஒன்று. சீனாவை எதிர்கொள்ளும் அமெரிக்க வெளிவிவகார நகர்வில் இந்தியாவின் பங்கு பிரதானமானது.

இவ்வாறிருந்தபோதும் வரிவிதிப்பை ஒரு நிபந்தனையாக மாற்றி இந்திய - ரஷ்ய வர்த்தக உறவை தடுக்கும் நகர்வுக்கே ட்ரம்ப் நிர்வாகம் முக்கியத்துவம் வழங்கியது. ஆனால், இந்தியாவோ அதற்கு இணங்கவில்லை. எவ்வித அச்சுறுத்தலுக்கும் இந்தியா அடிபணியாது என்னும் அடிப்படையில் மோடி நிர்வாகம் பதிலளித்து வருகிறது. அதேவேளை அமெரிக்காவின் நேட்டோ கூட்டணி நாடுகள் மீதும் ட்ரம்ப் நிர்வாகம் வரி விதிக்கத் தயங்கவில்லை. முதலில் அமெரிக்கா அதன் பின்னர்தான் எவரும் என்னும் அடிபடையில்தான் ட்ரம்ப் நிர்வாகத்தின் புதிய அணுகுமுறை அமைந்திருக்கிறது.

இது உலகத்துக்கு புதிய விடயம். இதனை எவரும் எதிர்பார்த்திருக்கவும் இல்லை. குறிப்பாக, இந்தியா இதனை எதிர்பார்த்திருக்கவில்லை. மோடிக்கும் ட்ரம்புக்கும் இடையில் தனிப்பட்ட ரீதியில் நல்லுறவு உண்டு. மோடியை தனது நண்பர் என்றே அடிக்கடி ட்ரம்ப் அழைத்து வருகிறார். ஆனால், அமெரிக்காவின் நலன் என்று வருகின்றபோது நண்பனென்ன, எதிரியென்ன என்னும் நிலைமையே காணப்படுகிறது. அதேவேளை இந்தியாவுக்கு நெருக்கடியாக இருக்கும் பாகிஸ்தான் இராணுவத் தளபதியுடன் அமெரிக்க நிர்வாகம் நெருங்கிய உறவைக் கொண்டிருக்கிறது. இதுவும் புதுடில்லிக்கு சிக்கலாக மாறியிருக்கிறது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் நாடுகளின் உள்விவகாரங்களுக்குள் வெளியாரின் தலையீடுகளும் முற்றிலும் மாற்றமடைந்துவிட்டது. உலகம் பெரும் யுத்தமொன்றுக்குள் வீழ்ந்து விடாததால் ஐக்கிய நாடுகள் சபை பெயரளவில் இயங்கி வருகிறது. இதன் காரணமாக, ஐ. நாவால் சக்திவாய்ந்த நாடுகளின் நிகழ்ச்சிநிரலை தாண்டி எதனையும் செய்ய முடியாதளவுக்கு கைகள் கட்டப்பட்ட நிலையில் இருக்கின்றன.

இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தால், இலங்கையின் மனித உரிமைகள் விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டு, வெளியார் தொடர்பான எதிர்பார்ப்புகள் தொடர்பிலும் மாற்றி யோசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. முன்னைய கண்ணோட்டத்தில் விடயங்களை நோக்கினால் வெறும் கற்பனையில் சீவிக்கலாம். கற்பனையில் சீவிப்பது சுகமானதுதான். மேலைத்தேய மார்க்சிய அறிஞர் ஒருவர் கூறுவதுபோன்று, "சூத்திரங்களில் சுகம் காணுதல்", 2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியலும் அப்படியான ஒன்றுதான்.

தேசமாக திரள்தல், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு செல்லுதல், மனித உரிமைகள் பேரவைக்கு வெளியில் விடயத்தைக் கொண்டு செல்லுதல் இப்படியான சுகமான சொற்களுடன் காலம் நகர்கிறது. ஏனெனில், இவ்வாறான விடயங்களை சுட்டிக்காட்டுவதற்கு எதனையும் செய்ய வேண்டியதில்லை. யாழ்ப்பாணத்தில் கதிரைகளில் அமர்ந்தவாறு அறிக்கைகளை வெளியிடுவதுடன் கடமையை நிறைவு செய்து கொள்ளலாம். இதுதான், கடந்த பதினாறு வருடங்களாக இடம்பெற்று வருகிறது.

அழுத்தங்களை வழங்க வேண்டும்தான் அதற்காக, சாத்தியமான அனைத்து வழிகளிலும் ஒன்றுபட்டு இயங்குவது தவறல்ல. ஆனால், அதனுடன் மட்டும் திருப்திப்பட்டுக் கொண்டு நாட்டுக்குள் முன்னெடுக்க வேண்டிய விடயங்களை இரண்டாம் பட்சமாக்குவதுதான் தவறானது. ரணில் - மைத்திரி ஆட்சிக்காலம் இதற்கு சிறந்த உதாரணம். புதிய அரசியல் யாப்பு என்று கூறி செய்யக்கூடிய விடயங்களை செய்யாமல் விட்டதன் விளைவு இறுதியில் புதிய அரசியல் யாப்பும் இல்லை - மாகாண சபைகள் தேர்தலும் இல்லை என்னும் நிலையில் முடிவுற்றது. அவ்வாறான தவறை மீண்டும் விட்டுவிடாத வகையிலேயே தமிழ் கட்சிகள் செயலாற்ற வேண்டும்.

# ஜனநாயகம் பற்றி மகிந்த, சஜித், மைத்திரி பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதற்கு சமம்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

வவுனியா, ஓக. 29

"சட்டம் தனது கடமையைச் சரிவர செய்யும்போது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே கூட்டணி அமைத்து அரசியல் பழிவாங்கல் புராணத்தை எதிரணிகள் ஓதி வருகின்றன. மைத்திரி, மகிந்த, சஜித் தரப்புகள் ஜனநாயகம் பற்றி பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானதாகும்", இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார இணைப்பு அலகும் முயற்சியாண்மை கற்கைநெறி மாணவர்களும் இணைந்து நடத்திய உலக முயற்சியாளர் தின விழாவும் மாபெரும் வர்த்தக சந்தையும் நிகழ்வில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "உலக முயற்சியாளர்களை நாம் பாதுகாக்க வேண்டும் - அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுக்க வேண்டும். ஆனால், ஊழல் வாதிகளை பாதுகாக்கக் கூடாது. அவர்கள் சுதந்திரமாக சுற்றிதிரிவதற்கு இடமளிக்கவும் கூடாது. எனவே, முயற்சியாளர்களை பாதுகாப்பது எவ்வளவு முக்கியமோ அதுபோல்தான் ஊழல்வாதிகளுக்கு எதிராக கட்டாயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கடந்தகாலங்களில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டம் தற்போது செயல்பட ஆரம்பித்துள்ளது. எனவேதான் தம்மை தற்காத்துக் கொள்வதற்காக கள்வர்கள் கூட்டு சேர்ந்துள்ளனர். இது ஜனநாயகத்துக்கான கூட்டணி அல்ல. மாறாகக் கள்வர்களை காப்பதற்கான கூட்டணியாகும்.

ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்தவர்கள், ஜனநாயகம் பற்றி கதைப்பது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பான செயலாகும். நாட்டில் இன்று நீதி கட்டமைப்பு சுயாதீனமாக செயற்படுகின்றது. எவ்வித அரசியல் தலையீடுகளும் இல்லை. சட்டம் தனது கடமையை செய்வதற்குரிய வளங்களை நாம் வழங்கி வருகிறோம். ஜனநாயகம் பற்றி எதிரணிகள் எமக்கு பாடம் எடுக்க வேண்டியதில்லை. ஜனநாயகம் என்றால் என்னவென்பதை செயலில் காட்டியவர்கள் தான் நாம் - என்றார். (ஐ)

# நூல் அறிமுகமும் விமர்சனமும்

யாழ்ப்பாணம், ஓக. 29

எழுத்தாளரும் விமர்சகருமான குருநகரை சேர்ந்த அ. யேசுராசா எழுதிய, 'பனைமீன் நாடன்பக்கம்' என்ற கலை இலக்கிய பத்தி எழுத்துகளின் தொகுப்பு நூலின் அறிமுகமும் விமர்சனமும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4. 00 மணிக்கு 18/2, அம்மன் வீதி, கந்தர்மடத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

மூத்த எழுத்தாளர் வடகோவை வரதராஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், அறிமுக உரையை ஆசிரியரும் விமர்சகருமான சி. ரமேஷ், விமர்சன உரைகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கந்தையா சிறீ கணேசன், தி. செல்வமனோகரன் ஆகியோர் நிகழ்த்துவர். ஏற்புரையை நூலாசிரியர் நிகழ்த்துவார். (ஐ)

# புல்வெளிகளுக்கு தீயிடும் விஷமிகள் கட்டுப்படுத்த தயங்கும் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஓக. 29

வேலணை பிரதேச பகுதியில் புல்வெளிகளுக்கு விஷமிகளால் தீயிடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இது தொடர்பில், அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கத் தயங்கி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.



நேற்றுமுன்தினம் இரவு மண்கும்பான் பிள்ளையார் ஆலய சுற்றுப்புற சூழலிலுள்ள புல்வெளியை விஷமிகள் தீ வைத்தனர். இதனால், அந்தப் பகுதியால் மக்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன், சுற்றுச்சூழலுக்கும் அழிவு ஏற்பட்டது.


இது தொடர்பில் வேலணை பிரதேச சபை செயலருக்கு அறிவிக்கப்பட்டு யாழ். மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் அந்தப் பகுதிக்கு அழைக்கப்பட்டு சில மணிநேர போராட்டத்தின் பின்னர் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இதனிடையே, அல்லைப்பிட்டி முதல் வேலணை வரையான புல்வெளிகளுக்கு அடிக்கடி விஷமிகள் தீயிட்டு வருகின்றனர். இதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க உயரதிகாரிகள் தயங்குகின்றனர் என்று கூறப்படுகிறது.

குறித்த பகுதி பறவைகள் சரணாலயமாக உள்ளது. பருவமழை காலங்களில் வலசை பறவைகள் இங்கு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், புல்வெளிக்கு தீ வைப்பதால் கால்நடைகளும் உணவின்றி தவிக்கின்றன. அந்தப் பகுதியால் போக்குவரத்து செய்வோரும் குடியிருப்போரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



ஓகஸ்ட் - 29 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 13
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சஷ்டி




**மேடம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிடைக்கும். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களின் பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். மனசாட்சி படி செயல்பட வேண்டிய நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விவாதம் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். பிரபலங்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். மதிப்புக்கூடும் நாள்.

**மகரம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

# ஆளணி வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

## பொது நிர்வாக அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

அரசாங்கத்தால் ஆளணி வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் எச். அபயரட்ண தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தேவைப்பாடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றங்களை ஆராயும் கூட்டம் அமைச்சர் அபயரட்ண தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது அமைச்சர் மேலும் கூறுகையில்,

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இயற்கை வளங்கள் அதிகம் உள்ளன. ஆனால், வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது நிலவசதி பற்றாக்குறையாகவுள்ளது. எனவே, இருக்கின்ற நில வளங்களை திறமையாக பயன்டுத்த வேண்டும். உற்பத்தித் திறன் மூலம் நாட்டின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

மேலும், பதவி நிலை உத்தியோகத்தர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர் உள்ளிட்ட வகையில் அரசாங்கத்தால் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படும். அபிவிருத்தித் திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதியை இவ்வாண்டுக்குள் முழுமையாக பயன்படுத்துவதனை சவாலாக ஏற்றுச் செயல்பட வேண்டும். இனம், மதம், மொழி கடந்து சகோதரத்துவத்துடன் நாட்டின் வளர்ச்சிக்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்"- என்றார். (எ-05)

# யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நிர்வாக செயல்பாடுகள் மிக சிறப்பாகவுள்ளன

## பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நிர்வாகச் செயல்பாடுகள் மிகவும் சிறப்பாகவுள்ளன என்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் எஸ். செயலாளர் எஸ். ஆலோக பண்டார தெரிவித்தார்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர் நிஷாந்த ஆகியோர் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சின் செயலாளர் மேலும் கூறுகையில், "இலங்கையில் அதிக கவனம் ஈர்க்கப்படும் மாவட்டமாக யாழ்ப்பாணம் மாவட்டம் உள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நிர்வாகச் செயல்பாடுகள் மிகவும் சிறப்பாகவுள்ளன" என்று பாராட்டினார். இந்தக் கலந்துரையாடலின் நோக்க மானது மாவட்டத்தின் நிர்வாகத் தேவைப்பாடுகளை ஆராய்வதே எனவும் ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியான தேவைப்பாடுகளை பிரதேச செயலாளர்களிடம் கேட்டறிந்து கவனத்தில் எடுத்தார்.

இதேவேளை அரசாங்க அதிபர் பிரதீபன், பிரதேச செயலகங்களில் உள்ள ஆளணி வெற்றிடங்கள், நெடுந்தீவில் கடமை யாற்றும் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துச் சவால்கள், நடைமுறைப்படுத்தி வரும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றங்கள் உள்ளிட்ட விவரங்களை செயலாளருக்கு விவரமாக எடுத்துரைத்தார்.



கலந்துரையாடலுக்குப் பின்னராக அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிகச் செயலாளர் ஆகியோர் அரசாங்க அதிபர் சகிதம் மாவட்ட செயலகத்தின் நிர்வாகப் பிரிவு, தாபனப் பிரிவு , திட்டமிடல் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளுக்குச் சென்று கோவைகளை பேணும் முறைமைகளையும் அதன் பாராமரிப்புக்களையும் அவதானித்து சிறப்பான முறையில் கோவைகள் பேணப்படுவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (எ)

# வேலணை பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலர் கடமையேற்பு

யாழ்ப்பாணம், ஓக. 28

வேலணை பிரதேச செயலகத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பிரதேச செயலர் தனபாலசிங்கம் அகிலன் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் மாவட்ட செயலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றார்.

இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர். (எ)

# காளி அம்பாள் ஆலய கும்பாபிஷேக பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணம், நீர்வேலி அச்செழு அருள்மிகு காளி அம்பாள் திருக்கோவில் ஜீர்ணோத்தாரணப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 04 ஆம் திகதி காலை 06. 53 மணி தொடக்கம் 08. 52 மணி வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது. மஹா கும்பாபிஷேகம் நீர்வேலி கதிர்காம முருகன் ஆலய பிரதமகுரு சிவ சிறீ தி. மயூரகிரிக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. எண்ணெய்க்காப்பு சார்த்தும் நிகழ்வு எதிர்வரும் 03 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. ஆலய நிர்வாகத்தினரால் குருமார்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். ஆன்மீக விருந்தினராக தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு அரசாங்கத்துக்கு சவால் அல்ல!

### பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க

கொழும்பு, ஒக. 29

**தேர்தல் ஒன்றுக்கு அறிவிப்பு விடுத்தால் எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவின் உறுதிப்பாட்டை விளங்கிக் கொள்ளலாம். ஊழல்வாதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் ஊழல்வாதிகள் முன்னெச்சரிக்கையாக ஒன்றிணைந்துள்ளார்கள். எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு அரசாங்கத்துக்கு சவாலல்ல என்று தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நிதியை மோசடி செய்தார், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்துக்கு அவர் பொறுப்பு கூறவேண்டும் என்று கடந்த காலங்களில் அவர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்த அணியினர் தான் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக போரட்டத்தில் ஈடுபடுவதாக குறிப்பிடுகிறார்கள்.

166 இலட்சம் ரூபாய் அரச நிதியை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டுக்காகவே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார். இதனை எவ்வாறு ஜனநாயக விரோத செயல் என்று குறிப்பிடமுடியும்.

அவ்வாறாயின் முன்னாள் அமைச்சர்கள் பலர் அரச நிதி மோசடிக்காக இன்றும் சிறையில் உள்ளார்கள். அவ்வாறாயின் அதுவும் ஜனநாயக விரோதச் செயலா, அவர்களுக்கு ஆதரவாகவும் எதிர்த்தரப்பினர் போராட்டத்தில் ஈடுபடவேண்டியதுதானே.

தேர்தல் ஒன்றுக்கு அறிவிப்பு விடுத்தால் எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவின் உறுதிப்பாட்டை விளங்கிக் கொள்ளலாம். ஊழல்வாதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் ஊழல்வாதிகள் முன்னெச்சரிக்கையாக ஒன்றிணைந்துள்ளார்கள். எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு அரசாங்கத்துக்கு சவாலல்ல.

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்படவேண்டும். எவருக்கும் சிறப்பு சலுகை வழங்கக்கூடாது. சுயாதீன விசாரணைகளுக்கமையவே நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுகிறது. நீதிமன்றத்தின் உத்தரவை குறுகிய அரசியல் நோக்கத்துக்காக விமர்சிப்பது முறையற்றது-என்றார். (அ)

# சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 29

நடப்பாண்டில் இதுவரை ஒரு கோடியே 53 இலட்சத்து 5 ஆயிரத்து 54 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த மாதம் இதுவரை ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 766 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதுடன் அவர்களில் 38 ஆயிரத்து 456 சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர்.

பிரித்தானியா, இத்தாலி, ஜேர்மனி மற்றும் சீனாவிலிருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணிலை பழிவாங்கும் தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது

### கூறுகிறார் சுனில் ஹந்துன்நெத்தி



கொழும்பு, ஒக. 29

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடும் எதிர்க்கட்சியினர் முன்னாள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சட்டத்தில் விலக்களிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். இவர்களின் ஆட்சியில் சட்டம் எவ்வாறு செயற்படுத்தப்பட்டிருக்கும் என்பதை நாட்டு மக்கள் இதனூடான விளங்கிக்கொள்ளலாம் என கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பழிவாங்குவதற்கான தேவை அரசாங்கத்துக்கு கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அபிவிருத்தி குழுக் கூட்டத்தை தொடர்ந்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தியதற்காகவே அவர் கைது செய்யப்பட்டார். இதனை எவ்வாறு அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிடுவது.

ராஜபக்ஷர்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளினார்கள் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தாலும் அதனையும் அரசியல் பழிவாங்கல் என்றா குறிப்பிடுவார்கள்.

கடந்த கால ஆட்சியாளர்கள் அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தியதால்தான் இந்த நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையடைந்தது என்பதை நாட்டு மக்கள் மறக்கக்கூடாது.

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடும் எதிர்க்கட்சியினர் முன்னாள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சட்டத்தில் விலக்களிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். இவர்களின் ஆட்சியில் சட்டம் எவ்வாறு செயற்படுத்தப்பட்டிருக்கும் என்பதை நாட்டு மக்கள் ஆராயவேண்டும்.

ஊழலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாட்டு மக்கள் வலியுறுத்துகின்ற நிலையில் எதிர்க்கட்சியினர் சட்டத்தின் முன் பாரப்பட்சம் பார்க்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள்.

பல குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் தான் இன்று ஒரு அணிக்கு திரண்டுள்ளார்கள். ஊழல் மோசடியாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிடுவது ஒன்றும் புதிதல்ல- என்றார். (அ)

# பொலிஸ் முறைப்பாட்டு புத்தகத்தின் இரு பக்கங்களை கிழித்து தின்ற நபர்!

கொழும்பு, ஒக. 29

மஹவ தலைமையக பொலிஸ் நிலையத்தில், முறைப்பாட்டு பதிவு புத்தகத்தின் இரண்டு பக்கங்களைக் கிழித்து, வாய்க்குள் இட்டு மென்றதாக கூறப்படும் முறைப்பாட்டாளர் ஒருவருக்கு பிணையில் செல்ல மஹவ நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட நபர் மஹவ, பொல்கடுவவைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் கடமையைத் தடுத்தமை மற்றும் அரசாங்க சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்கு எதிராக அவதூறு பரப்பியதாக இருவருக்கு எதிராக குறித்த நபர் மஹவ பொலிஸ் நிலையத்தின் பலவித முறைப்பாட்டுப் பிரிவில் முறைப்பாடு அளித்திருந்தார்.

முறைப்பாட்டாளர் முதல் நாள் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகாததால் சம்பவத்தில் தொடர்புடைய மற்ற தரப்பினரை எச்சரித்த பின்னர் வாக்குமூலங்களைப் பதிவு செய்து அவர்களை விடுவிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு வந்த முறைப்பாட்டாளர், இந்த முறைப்பாட்டை மேலும் தொடரக்கூடாது என்றும், அதை மீளபெற வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அதன்படி, பொலிஸார் முறைப்பாட்டை முடிவுறுத்தினர்.

எனினும் பின்னர், சந்தேக நபர் பொலிஸாரை அணுகி, முறைப்பாட்டை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று கூறியதுடன் முறைப்பாட்டை பார்க்க விரும்புவதாகக் கூறி, பொலிஸாரின் முறைப்பாட்டு புத்தகத்தின் இரண்டு பக்கங்களைக் கிழித்து வாய்க்குள் இட்டு மென்றதாக கூறப்படுகிறது. (அ)

# 50 மில்லியன் ரூபா போதைப்பொருளுடன் பெண் உட்பட நால்வர் கைது!

கொழும்பு, ஒக. 29

சுமார் 50 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின்போதைப் பொருளுடன் பெண் ஒருவர் உட்பட நால்வரைக் கொழும்பு குற்றவியல்பிரிவுகைதுசெய்துள்ளது.

குறித்த சந்தேகநபர்களிடம் இருந்து 4 கிலோ 302 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

முன்னதாக, மாளிகாவத்தை பகுதியில் 206 கிராம் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில்

அங்கொட பகுதியில் அமைந்துள்ள அவரின் வீட்டிலிருந்து நான்கு பொதிகளில் இருந்து 3 கிலோ 784 கிராம் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மேலதிக விசாரணைகளின் போது கொழும்பு 14ல் உள்ள வீடொன்றில் இருந்து 106 கிராம் ஹெரோயினுடன் இன் னுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# 'உறுமய' காணி உறுதி பெற்றுத் தருவதாகக் கூறி 164 பேரிடம் 9.8 கோடி ரூபா மோசடி செய்த பெண் கைது!

கொழும்பு, ஒக. 29

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 'உறுமய' காணி உறுதி வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் நிரந் தர காணி உறுதியை பெற்றுக் கொடுப்பதாக உறுதியளித்து, பெருமளவானோரிடம் 98,430,000 ரூபா நிதியை மோசடி செய்த வர்த்தகரான பெண் ஒருவர் குற்றப் புலனாய் வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பெண், மாணிக்கக்கல் மற்றும் காணி விற்பனை வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தவர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் காணி உறுதி இல்லாது வருடக் கணக்கில் காணப்படும் குடும்பங்களுக்காக 'உறுமய' வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்படி வர்த்தகரான இப்பெண், இதனை பயன்படுத்திக் கொண்டு காணி உறுதியைப் பெற்றுக் கொடுக்கும் போர்வையில் 164 பேரிடம் 98,430,000 ரூபா நிதியை பெற்றுக் கொண்டு மோசடி செய்துள்ளார். இது தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாட்டுக்கு இணங்க அவர் மேற்படி திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்ட பின் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள 42 வயதான மேற்படி சந்தேக நபரை, குற்றவியல் தண்டனை சட்டக் கோவையின் 386/389மற்றும் 400 சரத்துகளின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# பொது இடங்களில் வெற்றிலை எச்சிலை உமிழ்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஒக. 29

பொது இடங்களில் வெற்றிலை எச்சிலை உமிழ்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது. பேருந்து தரிப்பிடங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் வெற்றிலை எச்சில் உமிழப்படுகின்றமை தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட உரிய அரச நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக முறைப்பா டளிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த விடயம் தொடர்பில் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், பொது இடங்களில் வெற்றிலை எச்சிலை உமிழ்பவர்களுக்கு எதிராக தற்போதைய அரசாங்கம் சட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

வெற்றிலை எச்சிலை பொது இடங்களில் உமிழ்பவர்களுக்கு எதிராக குறைந்தபட்சம் 3,000 ரூபாவும் அதிகபட்சமாக 25,000 ரூபாவும் அபராதமாக விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகக் குழுக்களின் கைது நடவடிக்கை தொடரும்!

## அமைச்சர் ஆனந்த விஜேபால



கொழும்பு, ஓக. 29

**கெஹல்பத்தர பத்மே மற்றும் கமாண்டோ சாலிந்தா உள்ளிட்ட இலங்கையின் முக்கிய பாதாள உலகக் குழுவினரைச் சேர்ந்த 06 பேர் இந்தோனேசிய பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பாதாள உலகக் குழுவினர் தொடர்பான எங்களுடைய கைது நடவடிக்கை தொடரும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடத்திற்கு வரும்போது இந்த நாடு இருந்த நிலை பொருளாதார பிரச்னை, நாட்டின் சட்ட ஒழுங்கு பிரச்னை எனப் பல பிரச்னைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

அந்த சவால்களை வெற்றி கொண்டு இந்த 10 மாதங்களாக நாங்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் உங்களுக்கு தெரியும். குறிப்பாக நாட்டின் சட்ட ஒழுங்கு பிரச்னை, நீதியை நிலைநாட்டுவதில் இருந்த சிக்கல்கள் தொடர்பிலும் பல சவால்களை சந்திக்க நேர்ந்தது.

இலஞ்சம் மற்றும் ஊழல் மற்றும் மோசடி என 3 பிரதான சவால்கள் எங்கள் முன் இருந்தன. இதனை கட்டுப்படுத்த வேண்டும் முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் சட்டத்தை முறையாக, கடுமையாக நடைமுறைபடுத்தினோம். இதனால் நாட்டில் பல இடங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பங்கள் அதிகரிக்க தொடங்கின.

பலரை நாங்கள் தொடர்ச்சியாக கைது செய்தோம். போதைப்பொருள் கடத்தல் பல முறியடிக்கப்பட்டன. நாட்டை பாதுகாக்க பல நடைமுறைகளை கையாண்டோம். நாட்டின் பாதுகாப்பையும் மக்களின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்த பல நடவடிக்கைகளை கையாண்டோம்.

நாடு என்ற ரீதியில் பல உபாயங்களை சரியாக கையாண்டு நடைமுறைபடுத்தியதன் விளைவாக இந்தோனேசிய பாதுகாப்புப் படையினரால் கெஹல்பத்தர பத்மே மற்றும் கொமாண்டோ சலிந்த, பெக்கோ சமன் உள்ளிட்ட நாட்டின் முக்கிய பாதாள உலகக்குழுவை சேர்ந்த 05 பேர் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக கடந்த 7 நாட்களாக இலங்கை பொலிஸ் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் குற்றபுலனாய்வினர் தொடர்ச்சியாக இந்தோனேசிய பொலிஸாருடன் தொடர்பில் இருந்தார்கள். இவர்களை கைது செய்வது தொடர்பாக உன்னிப்பாக நாங்கள் அவதானம் செலுத்தியிருந்தோம்.

இன்டர்போல் மற்றும் இந்திய உளவுத்துறையும் பாரிய பங்களிப்பினை வழங்கியிருந்தார்கள். நாங்கள் பொலிஸாருக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கியிருந்தோம்.

அதன் விளைவாக இவ்வாறு பாதாள உலகத்தினர் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய பலர் தொடர்சியாக கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவானது. நீதி அனைவருக்கும் பொதுவானது. தொடர்ச்சியாக பதவிகள் மற்றும் அந்தஸ்து என்பன பாராமல் அனைவரும் விசாரிக்கபடுவார்கள். நீதிக்கு மேல் எமது அரசாங்கத்தில் எதுவும் பெரிதல்ல. நீதிக்கு அனைவரும் அடிபணிய வேண்டும்.எங்களுடைய கைது நடவடிக்கை தொடரும்.

தவறு செய்தவர்கள் எங்களது ஆட்சியில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதை மீண்டும் நாங்கள் தெரிவித்துகொள்கின்றோம்.

இன்னும் இரண்டு மூன்று நாட்களில் கைது செய்யப்பட்ட பாதாள உலக குழு உறுப்பினர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்படுவார்கள்.அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். அவர்களுக்கான தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும்.

அதேபோன்று தான், அது அரசியல்வாதியா, பொலிஸ் அதிகாரியா, பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களா என்றெல்லாம் பாராமல் தவறு செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டணை பெற்றுக்கொடுக்கப்படுவார்கள் என்பதை மீண்டும் உறுதிப்பட தெரிவித்துக்கொள்கின்றேன்- என்றார். (அ)

# புள்ளிமான் வேட்டையாடிய குற்றச்சாட்டில் 5 பேர் கைது!

கொழும்பு, ஓக. 29

வில்பத்து தேசிய பூங்காவில் கர்ப்பம் தரிந்திருந்த புள்ளி மானை வேட்டையாடிய குற்றச்சாட்டில் 05 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீகஸ்தெனிய பகுதியில் ரோந்து சென்ற வில்பத்து தேசிய பூங்காவின் வனவிலங்கு அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதின் போது, வனவிலங்கு அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்து நபர் ஒருவர், சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

கைதின்போது சந்தேக நபர்களிடமிருந்து 12 போர் துப்பாக்கி, வெடிமருந்துகள், ஒரு கத்தி, இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு மின்சார டொர்ச் ஆகியவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

குறித்த மான் இறைச்சிக்காக வேட்டையாடப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# துசித ஹல்லொலுவவுக்கு மீண்டும் விளக்கமறியல்

கொழும்பு, ஓக. 29

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவை செப்ரெம்பர் 4 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விசாரணையை நடத்தி வரும் கொழும்பு குற்றப்பிரிவு மற்றும் பிரதிவாதி சட்டத்தரணிகள் முன்வைத்த உண்மைகளைப் பரிசீலித்த பின்னர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

(அ)

## பாணந்துறையில் துப்பாக்கிச்சூடு ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 29

பாணந்துறை, அலுபோக ஹவத்த பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச் சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சட்டத் தரணி எவ்.யு.வுட்லர் தெரிவித்துள்ளார்.

வீடொன்றில் இருந்த நபரொருவரை இலக்கு வைத்து மோட்டார் சைக்களில் பிரவே சித்த இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை உள்ளிட்ட 31 பேருக்கு அழைப்பாணை

கொழும்பு, ஓக. 29

இலங்கை பிரஜைகளுக்கு டிஜிற்றல் அடையாள அட்டைகளை வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக இந்தியாவுடன் இலங்கை அரசு கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வலுவற்றதாக்கி தீர்ப்பளிக்கக் கோரி முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்டோர் தாக்கல் செய்த இரண்டு மனுக்களை ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த மனுக்கள் நேற்று முன் தினம் பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, குமுதுனி விக்ரமசிங்க மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தன.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன, இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ள அமைச்சரவை உறுப்பினர்கள் உட்பட பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை கிடைக்கவில்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனிஷ்க விதாரண, வழக்கை பரிசீலிப்பதற்கான விரைவான திகதியைக் கோரினார்.

அதன்படி, பிரதிவாதிகளுக்கு மீண்டும் அழைப்பாணை விடுக்குமாறு மனுதாரர்களின் சட்டத்தரணிகளுக்கு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு அறிவித்தது.

பின்னர் மனுவை ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்குமாறு நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது.

இந்த மனுக்களின் பிரதிவாதிகளாக, டிஜிற்றல் பொருளாதார அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி, பிரதமர் ஹரிணி அமரசூரிய, அமைச்சரவை உள்ளிட்ட 31 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

(அ)

# உற்பத்தி கைத்தொழிற்துறையை வலுப்படுத்த அரசாங்கம் அதிகபட்ச ஆதரவினை வழங்கும்!

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 29

நாட்டின் நுகர்வோருக்கு தரமான மற்றும் உயர்தர பீங்கான் பொருட்களை நியாயமான விலையில் வழங்க அரசாங்கம் அதிகபட்ச ஆதரவை வழங்கும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பீங்கான் கைத்தொழிற்துறையில் நிலவும் பிரச்னைகள் குறித்து கருத்துகள் மற்றும் பரிந்துரைகளைப் பெறுவதற்காக உள்ளூர் வர்த்தகர்களுடன் நடைபெற்ற 2026 வரவு-செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும் உள்ளூர் வர்த்தகர்களைப் பாதுகாக்கவும் நாட்டில் உற்பத்தித் துறையை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் மற்றும் உற்பத்தித் துறையுடன் தொடர்புடைய தற்போதைய பிரச்னைகள் மற்றும் சவால்கள் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் குளியலறை உதிரிப்பாகங்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புப் பொருட்கள் உள்ளிட்ட பீங்கான் பொருட்களின் உற்பத்திகள் தொடர்பாகவும் இதன் போது தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டது. சந்தையில் தற்போது கிடைக்கும் மேற்படி பொருட்களின் தரத்தைப் பாதுகாப்பது குறித்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

நாட்டின் நுகர்வோருக்கு தரமான மற்றும் உயர்தர பீங்கான் பொருட்களை நியாயமான விலையில் வழங்க அரசாங்கம் அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மூலப்பொருட்களை பெறுவது உட்பட பீங்கான் கைத்தொழிற்துறை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான சாத்தியமான தீர்வுகள் குறித்தும் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ராஜிதவுக்கு எதிரான பிடியாணையை நிறுத்தக் கோரும் மனு விசாரணைக்கு

கொழும்பு, ஓக. 29

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராகக் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணையை நிறுத்தி வைக்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த சீராய்வு மனுவை விசாரிக்கக் கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்தல் அனுப்பியுள்ளது.

மேலும், ராஜித சேனாரத்னவை கைது செய்ய பிறப்பித்த பிடியாணையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க அவரது சட்டத்தரணிகள் தற்காலிக இடைக்கால தடை உத்தரவை கோரிய போதிலும், அந்த உத்தரவை பிறப்பிக்காத மேல் நீதிமன்றம், பிரதிவாதி இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் அனுப்புவதாக மட்டுமே கூறியது.

சந்தேக நபருக்காக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கலிங்க இந்ததிஸ்ஸ, வழங்கப்பட்ட அறிவிப்பின்படி இன்று நிச்சயமாக கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாவார் என்று கூறினார். பின்னர் மனுவை செப்ரெம்பர் 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதி உத்தரவிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டம்!

## நான்கு கோரிக்கைகளை முன்வைத்து

கொழும்பு, ஒக. 29

**இலங்கை போக்குவரத்துச் சபையின் பல தொழிற்சங்கங்கள் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.**

தனியார் பேருந்துகளுடன் கூட்டு நேர அட்டவணையில் இயக்கும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், வேறு பல கோரிக்கைகள் காரணமாகவும் இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதாக அவை சுட்டிக் காட்டியுள்ளன.

இதேவேளை, அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த நேர அட்டவணையில் பல சிக்கல்கள் இருப்பதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்னவும் தெரிவித்தார்.

இருப்பினும், அனைத்து தரப்பினரின் கருத்துகளின் அடிப்படையில் கூட்டு நேர அட்டவணையை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணையகத் தலைவர் பி.ஏ.சந்திரபாலா குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகளில் பெரும்பாலானவை ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளதால், இந்த வேலைநிறுத்தம் நியாயமற்றது என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன கூறினார்.

இலங்கை போக்குவரத்துச் சபையுடன் இணைந்த தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக அறிவித்தபோதிலும், நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் கொழும்பு மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து சேவையைத் தொடங்கிய பேருந்துகள் வழக்கம் போல் பயணத்தை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பாதாள குழுவை சேர்ந்த இலங்கையர் ஆறு பேர் இந்தோனேசியாவில் கைது!

கொழும்பு, ஒக. 29

கெஹல்பத்தர பத்மே மற்றும் கொமாண்டோ சாலிந்த உள்ளிட்ட இலங்கையின் முக்கிய குற்றக் கும்பலைச் சேர்ந்த 06 பேர் இந்தோனேசிய பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் இன்டர்போல் இணைந்து மேற் கொண்ட கூட்டு நடவடிக்கையின்போது இந்தக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களில் பாணந்துறை நிலங்க, பேக்கோ சமன் மற்றும் அவரது மனைவி மற்றும் மற்றொரு நபரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் திட்டங்கள் மற்றும் சர்வதேச தொடர்புகள் குறித்து மேலும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வரலாற்று சிறப்புமிக்க பொலிஸ் நடவடிக்கை!

## பாதாளக் குழு கைது தொடர்பில் பொலிஸ்மா அதிபர் பெருமிதம்

கொழும்பு, ஒக. 29

இந்தோனேசியாவில் ஐந்து ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் ஒரே நேரத்தில் கைது செய்யப்படுவது வரலாற்றில் இதுபோன்ற ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட முதல் முறை என்று பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளைக் கைது செய்வது தொடர்பாக நேற்றுக் காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கைது செய்யப்பட்ட ஐந்து நபர்களும் தற்போது இன்டர்போலால் வெளியிடப்பட்ட சிவப்பு அறிவிப்புகளுக்கு உட்பட்டவர்கள்.

இலங்கை பொலிஸாரின் ஒருங்கிணைப்பு மற்றும் இன்டர்போலின் உதவியுடன் இந்தோனேசிய பொலிஸாரினால் தொடர்புடைய குற்றவாளிகளைக் கைது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நாட்டில் அரசியல் திட்டமிடப்பட்ட குற்றங்களில் ஈடுபட்ட வரலாறு இருக்கிறது. தற்போது அந்த சூழல் மாறிவிட்டது.

குற்றவாளிகளுக்கு அரசியல் பாதுகாப்பு இல்லாத சூழல் உருவாகி வருகிறது.

இந்த நாட்டில் செய்யப்படும் பல குற்றங்கள் வெளிநாடுகளில் இருந்து வரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளால் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசியல் செல்வாக்கு இல்லாமல் அத்தகைய நபர்கள் தொடர்பாக சட்ட முடிவுகளை எடுக்க பொலிஸாருக்கு தற்போது அறிவுறுத்தல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

டுபாய், ஓமன், ரஷ்யா, பெலாரஸ் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் அதிகமாக இருக்கின்றனர்.

அவர்கள் குறித்து விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக மாற்றுவதற்கு ஆதரவளித்த இந்தோனேசிய தூதரகத்திற்கு நன்றி-என்றார். (அ)

# சிறுத்தை பற்கள் நகங்களுடன் இருவர் கைது!



கொழும்பு, ஒக. 29

பன்னிபிட்டிய பிரதேசத்தில் சிறுத்தையின் பற்கள் மற்றும் நகங்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கங்கொடவில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (அ)

# இரு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!

கொழும்பு, ஒக. 29

தங்காலை, மஹாவெல பகுதியில் நேற்று முன் தினம் மாலை இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் மொத்தம் பதினொரு பேர் காயமடைந்தனர்.

மாத்தறையிலிருந்து தங்காலை நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும், தங்காலையிலிருந்து திக்வெல்ல நோக்கிச் சென்ற மற்றொரு இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக நகுலுகமுவ மற்றும் தங்காலை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். (அ)

# தன் பெற்றோரை கொன்றவரை கொன்று எரித்து புதைத்து பழி தீர்த்த மகன் கைது!

கொழும்பு, ஒக. 29

கலேவெல, தேவ/ஹுவ பகுதியில் ஆறு வருடங்களுக்கு முன்பு தமது பெற்றோரைக் கொலை செய்ததற்கு பழி வாங்கும் விதமாக, ஒருவரைத் தாக்கி கொலை செய்து, அவரது உடலை எரித்ததாக சந்தேகத்தின் பேரில் கடற்படையில் பணியாற்றும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக கலேவெல மகுலுகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கலேவெல, தேவ/ஹுவ பகுதியைச் சேர்ந்த 59 வயதான ஏ.ஜி. விமலசேன என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர் கடந்த 25 ஆம் திகதி முதல் காணாமல்போயுள்ளதாக மகுலகஸ்வெவ பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

அதற்கமைய, இறந்தவர் சார்பில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை உடனடியாக விசாரித்த பொலிஸார், நேற்று முன் தினம் காலை விடுமுறையில் இருந்த ஒரு கடற்படை வீரரைக் கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணை யின்போது குறித்த கொலை குறித்த தகவல்கள் தெரிய வந்துள்ளன.

கடந்த 2019 ஏப்ரல் 16ஆம் திகதி, தேவஹுவ பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்த ஒரு தம்பதியினர் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர்.

இந்தக் கொலையைத் தொடர்ந்து, தம்பதியரின் இரண்டு மகன்களும் தனிமையில் அநாதரவாகியுள்ளனர்.

இளைய மகன் அப்போது கடற்படையில் இணைந்து தனது பயிற்சி முடித்திருந்தார்.

குறித்த தம்பதியினரை இறந்த பெண்ணின் இரண்டு சகோதரர்கள் கொலை செய்த தாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

காணித் தகராறுதான் கொலைக்குக் காரணமென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்த நிலையில், அவர்களுக்கு பிணை வழங்கப்பட்ட பின்னர் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்தது.

2019 ஆம் ஆண்டு தமது பெற்றோரின் கொலையில் தொடர்புடையதாகக் கூறப்படும், நீதிமன்றத்தில் இருந்து பிணையில் வந்த இறந்த பெண்ணின் சகோதரரே இவ்வாறு கொலை செய்யப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# கம்மன்பிலவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஒக. 29

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நேற்று முன் தினம் கொழும்பு கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுரவிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதியன்று ஊடக சந்திப்பொன்றில் முன்னாள் அமைச்சர் தெரிவித்த கருத்து தொடர்பிலான முறைப்பாட்டை தொடர்ந்தே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

குறித்த ஊடக சந்திப்பில், உதய கம்மன்பில சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை சிதைக்கக்கூடிய கருத்துக்களை தெரிவித்ததாக முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மன்றுரைத்தனர்.

இந்தநிலையில் குறித்த கருத்துக்கள் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் கீழ்,குற்றமாகுமா என்பதைத் தீர்மானிக்க விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (அ)

# பொலிஸ் அதிகாரியை காயப்படுத்தியவர் கைது!

கொழும்பு, ஒக. 29

கடந்த 26 ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு அருகில் நடந்த போராட்டத்தின் போது ஒரு பொலிஸ் அதிகாரியை காயப்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடமையில் இருந்த ஒரு பொலிஸ் அதிகாரி வீசப்பட்ட போத்தலால் காயமடைந்தார் எனக் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றப்பிரிவின் அதிகாரிகள் குழுவினால் தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர் களுத்துறையில் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மீது காயங்களை ஏற்படுத்தியதாகவும், பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சந்தேக நபர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டு கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர் களுத்துறை, நாகொடவைச் சேர்ந்த 52 வயதுடைய முன்னாள் நகரசபை உறுப்பினர் ஆவார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோர் தின போராட்டத்துக்கு ஆதரவு தருக

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை

கல்முனை, ஒக. 29

**நாளை 30 ஆம் திகதி வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தின போராட்டங்களில் சகலரும் பங்கேற்று ஆதரவு தாருங்கள் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அம்பாறை மாவட்ட சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டம் கல்முனை ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


அவர் மேலும் கூறுகையில், “நாளை 30 ஆம் திகதி வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. குறிப்பாக யாழ்ப்பாணம், நல்லூரில் உள்ள சங்கிலியன் சிலையிலிருந்து தொடங்கி செம்மணி வரை பேரணி சென்று, அவ்விடத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி பாலத்திலிருந்து போராட்டம் ஆரம்பித்து காந்தி பூங்கா வரை ஊர்தி ஊர்வலத்துடன் சென்று கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

16 வருட காலங்களாக இலங்கையில் ஆட்சியில் இருந்த பல ஜனாதிபதிகளுடன் எங்கள் உறவுகளுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதை கேட்டு உண்மையை கூறும் படியும் எங்களது உறவுகளை உயிருடன் கூட்டி சென்று பின்னர் காணாமல் ஆக்கப்பட்டது. இவ்வாறு காணாமல் ஆக்கிய சம்பவத்துடன் இராணுவப் படையினரிடம் கேட்டு கூறுங்கள் என்பதை கேட்டிருக்கின்றோம்.

16 வருடங்களாக உள்ளக பொறிமுறையில் நம்பிக்கை இல்லாமல் தற்போது நாங்கள் சர்வதேச பொறிமுறையை நாடியிருக்கின்றோம். சர்வதேச பொறிமுறைக் ஊடாக எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையையும் நீதியையும் பெற்றுத் தர வேண்டும் என்று நாங்கள் இப்போராட்டத்தில் கேட்க இருக்கிறோம். எனவே எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரில் எங்கள் உறவுகளுக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

அதேநேரம், எமது அரசியல்வாதிகள் அனைவரும் சேர்ந்து எங்களது உறவுகளுக்காக அங்கு சென்று குரல் கொடுத்து இலங்கையில் ஓர் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை இந்த உலகத்துக்கு கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டு நிற்கின்றேன்” - என்றார். (எ-01)



# ஆசிரியர்களுக்கு தொற்றா நோய்க்கான பரிசோதனை

கல்முனை, ஒக. 29

அம்பாறை மாவட்டம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலுக்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லிமா வசீர் தலைமையில் இவ்வாரம் காரைதீவு பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஊழியர்களுக்கான தொற்றா நோய்களுக்கான பரிசோதனை மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது குருதி குளுக்கோஸ் மட்ட பரிசோதனை, குருதி கொலஸ்ட்ரோல் மட்ட பரிசோதனை, உடல் திணிவு சுட்டி பரிசோதனை மற்றும் குருதி அமுக்க பரிசோதனை போன்றன மேற்கொள்ளப்பட்டன. (எ-01)



# அபிவிருத்தி திட்டங்கள் குறித்து திருகோணமலையில் ஆராய்வு

திருகோணமலை, ஒக. 29

அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்களை திருகோணமலை மாவட்டத்தில் உரிய பகுதிகளில் மேம்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஜீ. எம். ஹேமந்த குமாரவின் ஒழுங்குபடுத்தலில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திர தலைமையில் நடைபெற்றது. குறித்த கூட்டத்தில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர மற்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், சண்முகம் குகதாசன், ரொசான் அக்மீமன, உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், மாகாண பிரதம செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படையினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் மாவட்ட மக்களின் பல்வேறுபட்ட பிரச்னைகள் உட்பட வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி தொடர்பிலும் கடந்த கால அபிவிருத்தி தொடர்பிலான மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பிலும் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டன. (எ-12)

# காரைதீவு - மண்டூர் திருத்தல பாதயாத்திரை நாளை ஆரம்பம்

காரைதீவு, ஒக. 29

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற “சின்னக் கதிர்காமம்” என்று அழைக்கப்படும் மண்டூர் சிறீ முருகன் ஆலயத்துக்கான வருடாந்த பாதயாத்திரை நாளை சனிக்கிழமை காரைதீவிலிருந்து நடைபெறவுள்ளது.

காரைதீவில் மாவடி சிறீ கந்தசுவாமி ஆலயத்திலிருந்து அதிகாலை நான்கு மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் இந்த பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

காரைதீவு இந்து சமய விருத்திச்சங்கம் இந்த பாதயாத்திரையை வருடாந்தம் நடத்தி வருகிறது.

காரைதீவிலிருந்து அதிகாலை 04. 00 மணிக்கு ஆரம்பிக்கும் பாதயாத்திரை கல்முனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி, நாவிதன்வெளி, வேப்பையடி, தம்பலவத்தை ஊடாக மண்டூரைச் சென்றடையும்.

மண்டூர் சிறீ முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. எதிர்வரும் செப்ரெம்பர் 07ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. (எ-08)

# 18 மில்லியன் ரூபா செலவில் புதிய ஆயுர்வேத மருந்தகம்

மட்டக்களப்பு, ஒக. 29

**2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகளின் கீழ் 18 மில்லியன் ரூபாய் செலவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மங்களகம பகுதியில் மாகாண சுதேச மருத்துவத் துறையின் கீழ் மங்களகம ஆயுர்வேத மருத்துவ மருந்தகத்தை நிர்மாணிப்பதற்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது.**



இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, ஆளுநரின் செயலாளர் ஜே. எஸ். அருள் ராஜ், மாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் நபீல் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-12)

முத்து நகரில் சூரிய மின் திட்டம்

# கம்பனி தொழிலாளர்களுடன் விவசாயிகள் வாக்குவாதம்

திருகோணமலை, ஒக. 29

திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முத்து நகர் விவசாய பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை சூரிய மின் சக்தி உற்பத்திக்காக மேலும் ஒரு தனியார் கம்பனியினர் உள்நுழைந்து வேலைத் திட்டத்தை முன்னெடுத்த நிலையில் அங்கு விவசாயிகள் மற்றும் குறித்த வேலைத் திட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு இலங்கைத் துறைமுக அதிகார சபையினர் உள்ளிட்டவர்களுடன் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ள குழுவினரும் உள் நுழைந்துள்ளனர். இதனைத் தடுக்க சென்ற விவசாயிகளை தனியார் நிறுவன ஊழியர்கள் தாக்கியதாகவும் தெரிய வருகிறது.

முத்து நகர் பகுதியில் ஏற்கனவே மக்களின் விவசாய காணிகளை அபகரித்து தனியார் நிறுவனங்களுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கியுள்ளனர். இதனையடுத்து அங்கு உள்ள விவசாய காணியில் திட்டத்தை ஆரம்பிக்க சென்ற நிலையில் இக் கை கலப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த முத்து நகர் பகுதி விவசாயிகள் தங்களின் அபகரிக்கப்பட்ட விவசாயக் காணியை மீட்டுத்தரக்கோரிய பல போராட்டங்களை அண்மையில் முன்னெடுத்தனர்.

இவ்வாறான நிலையில் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படாத காணிகளில் விவசாய செய்கை மேற்கொள்ள முடியுமான நிலைக்கு ஒத்துழைப்பதாக திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னர் கூறியிருந்த போதிலும் தற்போது அது சாத்தியமாகவில்லை. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்கு இந்தியா உதவி

## 50 சதவீத வரி விதிப்பு குறித்து ட்ரம்ப்பின் ஆலோசகர் சாடல்



**வாஷிங்டன், ஓக. 29**

**தொடர்ச்சியாக தள்ளுபடி விலையில் ரஷ்யாவிலிருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதுதான் உக்ரைன் மீதான உக்கிர தாக்குதலுக்கு காரணம் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகத்தின் வர்த்தக ஆலோசகர் பீற்றர் நவரோ தெரிவித்தார்.**


இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள 25 சதவீத கூடுதல் வரி விதிப்பு புதன்கிழமை முதல் அமுலுக்கு வந்தது. ஏற்கனவே விதித்த 25 சதவீத வரியோடு இந்த கூடுதல் 25 சதவீதமும் சேர்ந்துள்ள நிலையில் 50 சதவீத வரி விதிப்பு இந்தியாவின் ஏற்றுமதியை கடுமையாக பாதிக்கும். இதனால், தொழிலாளர் சார்ந்த துறைகள் ஏற்றுமதி 70 சதவீதம் அளவுக்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சூழலில் பிரபல வணிக ஊடக நிறுவனத்துடனான நேர்காணலில் பீற்றர் நவரோ பங்கேற்றார். இதன்போது அவர் மேலும் கூறுகையில், "மேற்கத்திய நாடுகளின் கடுமையான அழுத்தத்தையும் மீறி ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை தொடர்ந்து வாங்கி வரும் இந்தியாவை தண்டிக்கும் நோக்கில் இந்த 50 சதவீத வரி விதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியா அதை நிறுத்தினால் நிச்சயம் கூடுதல் வரி விதிப்பு குறைக்கப்பட்டு வெறும் 25 சதவீதம் மட்டுமே வரி விதிக்கப்படும்.

இந்தியா தொடர்ந்து கச்சா எண்ணெய் வாங்கி வருகின்ற காரணத்தால் உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரில் ரஷ்ய தரப்புக்கு மறைமுக உதவி கிடைக்கிறது. அந்த நிதி ஆதாரத்தை கொண்டுதான் ரஷ்யா தனது ஆக்கிரமிப்பை தொடர்கிறது. இதன் மூலம் ரஷ்ய யுத்தம் செய்ய இந்தியா உதவுகிறது. இந்தியாவின் இந்தச் செயலால் அமெரிக்கர்களுக்கு இழப்பு ஏற்படுகிறது"- என்றார். (எ)

# இந்தியா - பாகிஸ்தான் உட்பட 7 போர்களை நிறுத்தியுள்ளேன்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



வாஷிங்டன், ஓக. 29

இந்தியா - பாகிஸ்தான் உட்பட 7 போர்களை நிறுத்தியுள்ளேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியை வெள்ளை மாளிகையில் தென்கொரிய ஜனாதிபதி சந்தித்து பேச்சு நடத்தினார். இதன்பின்னர் செய்தியாளர்களிடம் ட்ரம்ப் இவ்வாறு குறிப்பிட்டார். உலகின் பல போர்களை நான் நிறுத்தியுள்ளேன். இந்தியா - பாகிஸ்தான் இடையே மிகப்பெரிய போர் ஏற்பட்டிருக்கும். இது வரை இந்தியா - பாகிஸ்தான் போர் உட்பட 7 போர்களை நிறுத்தியுள்ளேன்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே ஆயுதப் போராகவும் வெடிப்பதற்கு நேர்ந்தது. அப்போது "நீங்கள் எங்களுடன் வர்த்தகம் மேற்கொள்ள விரும்புகிறீர்களா? இல்லையா? இப்படி நீங்கள் சண்டையிட்டுக் கொண்டால், உங்களுடன் எந்தவிதமான வர்த்தகமும் மேற்கொள்ள மாட்டோம்"- என்றோம். சண்டையை நிறுத்த வர்த்தகத்தை பயன்படுத்தினேன், நான் நிறுத்திய 7 போர்களில் 4 போர்கள், வர்த்தகம் மற்றும் வரிவிதிப்பு அச்சங்களால் நிறுத்தப்பட்டவை. அவர்கள் போரைக் கைவிட்டுவிட்டனர். போர்களை நிறுத்தியதன் மூலம் கோடிக்கணக்கான டொலரை வரிவிதிப்பாக நாங்கள் பெற்றோம்- என்றார். (எ)

# ஸ்பெயினில் பாரம்பரிய தக்காளி சண்டை திருவிழா

புனோல், ஓக. 29

ஸ்பெயினில் பாரம்பரிய தக்காளி சண்டை திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயின் நாட்டில் ஆண்டுதோறும் ஒகஸ்ட் இறுதி வாரத்தில் தக்காளி திருவிழா நடத்தப்படுவது வழக்கம். பல ஆண்டுகளாக இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன்படி, இந்த ஆண்டு ஸ்பெயினின் கிழக்கே வாலன்சியா நகருக்கு மேற்கே 40 கிலோ மீற்றர் தொலைவில் புனோல் நகரில் இந்த பாரம்பரிய திருவிழா நேற்று நடைபெற்றது.

இதில், வெள்ளை நிற உடையில் ஆண்கள், பெண்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். இந்தத் திருவிழாவுக்காக நன்றாக விளைந்த, சிவப்பு நிறத்திலான தொன் கணக்கிலான தக்காளிகள் லொறிகளில் கொண்டு வந்து தயாராக வைக்கப்பட்டிருந்தன.

லா டொமேடினா என்ற பெயரில் நடத்தப்படும் இந்த பாரம்பரிய திருவிழாவில் உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, கென்யா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலாவாசிகள் திருவிழாவில் பங்கேற்க திரண்டு வந்தனர். உள்ளூர் மக்களுக்கு கட்டணம் எதுவும் இல்லை. பட்டாசு வெடிப்புகளுடன் திருவிழா களைகட்டத் தொடங்கியது. இந்தத் திருவிழாவில், தக்காளிகளை ஒருவர் மீது ஒருவர் வீசி மகிழ்ந்தனர். (எ)

# நீண்டகால போர்களுக்கு தயாராக இருக்க வேண்டும்

## இந்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்



புதுடில்லி, ஓக. 29

புதிய தொழில்நுட்பங்கள் போரின் தன்மையை மாற்றியமைத்துள்ளதால் குறுகிய மற்றும் நீண்டகால போர்களுக்கு இந்தியா தயாராக இருக்க வேண்டும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

மத்திய பிரதேசத்தில் நடைபெற்ற இராணுவ நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "வீரர்களின் எண்ணிக்கையும் ஆயுதங்களும் மட்டுமே இனி போதுமானதாக இருக்காது. சைபர் யுத்தம், செயற்கை நுண்ணறிவு, ஆளில்லா வான்வழி, ட்ரோன்கள் மற்றும் செயற்கைக்கோள் அடிப்படையிலான கண்காணிப்பு ஆகியவையே எதிர்காலப் போர்களை வடிவமைக்கவுள்ளன. புதிய தொழில்நுட்பங்கள் போரின் தன்மையை மாற்றியமைத்துள்ளதால் குறுகிய மற்றும் நீண்ட போர்களுக்கு இந்தியா தயாராக இருக்க வேண்டும். துல்லியமாக வழிநடத்தப்படும் ஆயுதங்கள், நிகழ்நேர நுண்ணறிவு மற்றும் தரவு சார்ந்த தகவல்கள் ஆகியவையே இப்போது எந்தவொரு யுத்தத்திலும் வெற்றிக்கான அடித்தளமாக மாறிவிட்டன.

நவீன போர்கள் இனி நிலம், கடல் மற்றும் வான்வெளியுடன் மட்டும் கட்டுப்படுத்தப்படாது. இனி அவை விண்வெளி மற்றும் சைபர்ஸ்பேஸ் வரை விரிவடையும். செயற்கைக்கோள் அமைப்புகள், செயற்கைக்கோள் எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் விண்வெளி கட்டுப்பாட்டு மையங்கள் ஆகியவை அதிகாரத்தின் புதிய கருவிகளாகும். தொழில்நுட்பம், ஒரு புதுமையை முழுமையாகப் புரிந்துகொள்ளும் நேரத்தில், இன்னொன்று உருவாகி, போரின் போக்கையே முற்றிலுமாக மாற்றும் அளவுக்கு உலகம் வேகமாக முன்னேறி வருகிறது"- இவ்வாறு ராஜ்நாத் சிங் தெரிவித்தார். (எ)

# அமெரிக்காவின் 50 வீத வரிவிதிப்பால் பல இலட்சம் கோடி பாதிப்பு ஏற்படும்

புதுடில்லி, ஓக. 29

அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பு காரணமாக இலங்கை மதிப்பில் சுமார் 14 இலட்சம் கோடி ரூபாய் ஏற்றுமதி பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக இந்திய ஏற்றுமதியாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்திய ஏற்றுமதியாளர்கள் வரி விதிப்பு குறித்து மேலும் கூறுகையில், "மருந்துகள், மின்னணு சாதனங்கள், பெற்றோலிய பொருட்கள் உள்ளிட்டவற்றுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு தொடரும். அதேநேரம் இறால், ஆயத்த ஆடைகள், தோல், இரத்தினங்கள் மற்றும் நகைகள் உள்ளிட்ட தொழிலாளர் சார்ந்த இந்திய நிறுவனங்கள் கடுமையான பாதிப்பைச் சந்திக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாக, அமெரிக்கச் சந்தைகளிலிருந்து இந்தியப் பொருட்கள் வெளியேற்றப்பட்டு, அமெரிக்காவின் குறைந்த வரி விதிப்பு சலுகையைப் பெற்ற இந்தியாவின் போட்டியாளர்களான பங்களாதேஷ், வியட்நாம், இலங்கை, கம்போடியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் பொருட்களுக்கு வரவேற்பு பெருகும். இதனால், 14 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதி பாதிக்கப்பட வாய்ப்புள்ளது" என்று தெரிவித்தனர். (எ)

# அமெ. பாடசாலையில் துப்பாக்கிச்சூடு: இரண்டு சிறார்கள் உட்பட மூவர் பலி

வாஷிங்டன், ஓக. 29

அமெரிக்காவின் மினியாபோலிஸில் உள்ள ஒரு பாடசாலையில் 27ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு சிறார்கள் உட்பட மூவர் பலியாகினர். 17 பேர் படுகாயமடைந்தனர்.

பாடசாலையின் காலை வழிபாட்டின் போது இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

8 மற்றும் 10 வயதுடைய இரண்டு சிறார்கள் உயிரிழந்ததை பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

குறித்த துப்பாக்கிச் சூடு சிறார்கள் மற்றும் வழிபாட்டில் கலந்து கொண்டவர்களை குறிவைத்து வேண்டுமென்றே நடத்தப்பட்ட வன்முறைச் செயல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பிறகு துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தன்னைத்தானே சுட்டுக் கொன்றதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வாக்குரிமையை பறித்த பா.ஜ.கவின் அதிகாரத்தை மக்கள் பறிப்பார்கள்

## பீஹாரில் ஸ்டாலின் தெரிவிப்பு

முசாபர்பூர், ஓக. 29

"பா.ஜ.க. எப்படி தேர்தல்களை கேலிக்கூத்தாக்கிவிட்டது என்பதை ராகுல் காந்தி வெளிச்சம் போட்டு காட்டிவிட்டார். மக்களின் வாக்குரிமையை பறித்த பா.ஜ.கவின் அதிகாரத்தை மக்கள் பறிப்பார்கள்" என பீஹாரில் வாக்காளர் அதிகார யாத்திரை பேரணியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் வாக்குத் திருட்டு குற்றச்சாட்டுகளை முன்வைத்து பீஹாரில் 1300 கிலோ மீற்றர் "வாக்காளர் அதிகார யாத்திரை"யை ராகுல் காந்தி மேற்கொண்டு வருகிறார்.

ஒகஸ்ட் 17 ஆம் திகதி சசாரமில் இருந்து தொடங்கிய 16 நாள் யாத்திரை, செப்ரெம்பர் முதலாம் திகதி பாட்னாவில் ஒரு பேரணியுடன் முடிவடைகிறது.

நேற்று முன்தினம் முசாபர்பூரில் நடைபெற்ற யாத்திரையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் கலந்துகொண்டார். அவர், ராகுல் காந்தி, தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோருடன் திறந்த காரில் சென்று மக்களைச் சந்தித்தார்.

இதனைத் தொடர்ந்து முசாபர்பூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றியபோதே ஸ்டாலின் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அமெரிக்க ஓபின் ரெனிஸ் அல்காரஸ் அசத்தல் வெற்றி

நியூயோர்க், ஒக. 29

அமெரிக்க ஓபின் ரெனிஸ் தொடரில் அசத்தல் வெற்றி பெற்ற கார்லஸ் அல்காரஸ் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்து கொண்ட அமெரிக்க ஓபின் ரெனிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் நட்சத்திர வீரரான கார்லஸ் அல்காரஸ், இத்தாலியின் மேட்டியா பெலுரசி உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அல்காரஸ் 6-1,6-0 மற்றும் 6-3 என்ற நேர் செற் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)





# இந்திய அணி தொடர்பில் வெளிநாட்டவர் விமர்சனம்

## கவாஸ்கர் கடும் எதிர்ப்பு

மும்பை, ஒக. 29

இந்திய அணி தொடர்பான வெளிநாட்டு வீரர்களின் விமர்சனங்களுக்கு கவாஸ்கர் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

அடுத்த மாதம் டுபாய் மற்றும் அபுதாபியில் நடக்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான (20 ஓவர்கள்) இந்திய அணி சில தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. அணித் தலைவராக சூர்யகுமார் யாதவ் தொடருகிறார். துணைத் தலைவராக சுப்மன் கில் நியமிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் இந்த அணியில் ஸ்ரேயஸ் ஐயர், ஜெய்ஸ்வால் ஆகியோருக்கு இடம் இல்லாதது விமர்சனத்துக்குள்ளானது.

குறிப்பாக சமீப காலமாக வெள்ளைப்பந்து போட்டிகளில் அசத்தலான செயல்பாடுகளை வெளிப்படுத்தி வரும் ஸ்ரேயஸ் ஐயர் தெரிவு செய்யப்படாதது பலரது மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இந்திய தெரிவுக்குழுவை ஏபி டி வில்லியர்ஸ் உள்ளிட்ட பல முன்னாள் வீரர்கள் விமர்சித்தனர்.

இந்த நிலையில், வெளிநாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள் ஏன் இந்திய கிரிக்கெட் குறித்து கவலைப்பட வேண்டும்? என்று முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், "வெளிநாட்டவர்கள், இந்திய கிரிக்கெட்டில் எந்தப் பங்கும் இல்லாதவர்கள். இந்திய கிரிக்கெட்டை பற்றிய அறிவு மிகக்குறைவாக இருந்தாலும், விவாதத்தில் குதித்து, தீயை மூட்டுவது ஆச்சரியமாக இருக்கிறது. அவர்கள் எவ்வளவு சிறந்த வீரர்களாக இருந்தாலும், இந்தியாவுக்கு எத்தனை முறை வந்திருந்தாலும், இந்திய அணியின் தெரிவு அவர்களின் விஷயம் அல்ல. அவர்கள் தங்கள் நாட்டு கிரிக்கெட்டில் கவனம் செலுத்த வேண்டும், இந்திய கிரிக்கெட்டைப் பற்றி நாங்கள் கவலைப்படுவோம். ஆச்சரியமாக, அவர்களது நாட்டு அணிகள் தேர்ந்தெடுக்கப்படும் போது, அவர்களிடமிருந்து கருத்து கேட்கப்படுவதில்லை.

இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்ற நாடுகளின் அணித் தெரிவு பற்றி பேசுவதை நீங்கள் எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா? இல்லை, நாங்கள் எங்கள் வேலையைப் பார்க்கிறோம்.

இன்று, பொது ஊடகங்களின் காலத்தில் பார்வைகளையும் பின்தொடர்பவர்களையும் பெறுவது முக்கியமாக இருக்கிறது. இதற்கு விரைவான வழிகளில் ஒன்று இந்திய கிரிக்கெட் விஷயங்கள் பற்றி கருத்து தெரிவிப்பது. பெரும்பாலும், அவர்கள் எதிர்மறையாகவே இதைச் செய்கிறார்கள், இதனால் இந்திய இரசிகர்களிடமிருந்து பெரும் எதிர்வினை கிடைக்கிறது. இது அவர்களின் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது. இதனால்தான் பல வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்கள் இந்திய கிரிக்கெட் மற்றும் வீரர்களைப் பற்றி எதிர்மறையாக கருத்து தெரிவித்து வாழ்க்கையை நடத்துகிறார்கள்" என்று கூறினார். (எ)





## சேப்பாக்கத்தின் சிங்கம்

# அஸ்வினுக்கு சி.எஸ்.கே. நெகிழ்ச்சி வாழ்த்து

சென்னை, ஒக. 29

சேப்பாக்கத்தின் சிங்கம் என்று அஸ்வினுக்கு சி.எஸ்.கே. அணி நெகிழ்ச்சி வாழ்த்து தெரிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான சென்னையை சேர்ந்த ரவிச்சந்திரன் அஸ்வின் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரின்போது, சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து திடீரென ஓய்வு பெற்றார். இருப்பினும் ஐ.பி.எல். மற்றும் தமிழ்நாடு பிரிமியர் லீக் போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வந்தார். இந்த வருடம் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடினார்.

அடுத்த சீசனிலும் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இருந்து விடைபெறுவதாக 38 வயதான அஸ்வின் அறிவித்துள்ளார்.

இந்தச் சூழலில் ஐ.பி.எல். தொடரிலிருந்து ஓய்வு பெற்ற அஸ்வினுக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் நிர்வாகம் நெகிழ்ச்சி வாழ்த்துகளை தெரிவித்துள்ளது.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில், "சேப்பாக்கத்தின் சொந்த சிங்கம். கரம் பந்தை திருப்புகிற சுந்தரன். முதல் முறையாக மஞ்சள் நிற சீருடையுடன் புழுதி பறக்கும் சேப்பாக்கம் ஆடுகளத்தில் அறிமுகமாகி உலக அரங்கில் சுழற்பந்து வீச்சில் ஆதிக்கம் செலுத்தியதுடன், அணிக்காக எல்லாவற்றையும் வழங்கினீர்கள். நமது பாரம்பரியத்தின் தூணாக இருந்து சேப்பாக்கம் கோட்டையில் கர்ஜித்தீர்கள். நன்றி அஸ்வின்" என்று பதிவிட்டுள்ளது. (எ)

# ஒருநாள் தரவரிசையில் சுப்மன் கில் முதலிடம்

## ஆஸி.வீரர்கள் முன்னேற்றம்

டுபாய், ஒக. 29

ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் சுப்மன் கில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். இதேவேளை, ஆஸி. வீரர்கள் முன்னேற்றமடைந்துள்ளனர்.


அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா இடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி சமீபத்தில் முடிவடைந்தது. இதில் வீரர்களின் செயல்பாடுகளை கணக்கில் கொண்டு சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) ஒருநாள் கிரிக்கெட் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

துடுப்பாட்ட தரவரிசையில் முதல் 10 இடங்களில் மாற்றமில்லை. இந்தியாவின் சுப்மன் கில் முதலிடத்திலும் ரோஹித் சர்மா 2ஆவது இடத்திலும் பாபர் அஸாம் 3ஆவது இடத்திலும் விராட் கோலி 4ஆவது இடத்திலும் தொடருகின்றனர். மற்றொரு இந்திய வீரரான ஸ்ரேயஸ் ஐயர் 8ஆவது இடத்தில் உள்ளார்.

இதில் குறிப்பிடத்தக்க மாற்றமாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் 142 ஓட்டங்கள் குவித்த அவுஸ்திரேலியாவின் டிராவிஸ் ஹெட் ஓர் இடம் முன்னேறி 11ஆவது இடத்தை பிடித்துள்ளார். இதே ஆட்டத்தில் 47 பந்துகளில் சதம் விளாசிய கேமரூன் கிரீன் 40 இடங்கள் முன்னேறி 78ஆவது இடத்தை பெற்றுள்ளார். மிட்செல் மார்ஷ் 48இல் இருந்து 44ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளின் பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் சுழற்பந்து வீச்சாளர்கள் தென்னாபிரிக்காவின் கேஷவ் மகராஜ், இலங்கையின் தீக்ஷனா இருவரும் தலா 671 புள்ளிகளுடன் முதலிடத்தை பகிர்ந்துள்ளனர். இந்திய சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் 3ஆவது இடத்திலும், ஜடேஜா 9ஆவது இடத்திலும் தொடருகின்றனர்.

சகல துறை வீரர்கள் தரவரிசையில் எந்த மாற்றமும் இல்லை. அஸ்மத்துல்லா உமர்சாய் முதலிடத்தில் தொடருகிறார். இந்தியாவின் ஜடேஜா 9ஆவது இடத்தில் உள்ளார். (எ)



# முத்தரப்பு ரி -20 தொடர்: யு.ஏ.இ. அணி அறிவிப்பு

டுபாய், ஒக. 29

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானுக்கு எதிரான முத்தரப்பு ரி - 20 தொடரில் பங்கேற்கும் யு. ஏ. இ. அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய கிண்ணத் தொடருக்கு தயாராகும் பொருட்டு பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (யு.ஏ.இ.) அணிகள் இடையே முத்தரப்பு ரி - 20 தொடர் இன்று தொடங்குகிறது. இதன் முதலாவது ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இந்தத் தொடருக்கான யு.ஏ.இ. அணி அறிவிக்கப்பட்டுள்ளது. முகமது வாசீம் தலைமயிலான அந்த அணியில் ஹைதர் அலி, ஜுனைத் சித்திக் போன்ற முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

யு.ஏ.இ. அணி விவரம் பின்வருமாறு:

முகமது வாசீம், ஹைதர் அலி, ராகுல் சோப்ரா, ஈதன் டிசோசா, முஹம்மது பரூக், முஹம்மது ஜவதுல்லா, ஹர்ஷித் கவுஷிக், ஆசிப் கான், ரோஹித் கான், சாகிர் கான், துருவ் பராஷர், அலிஷன் ஷரபு, ஆர்யன்ஷ் சர்மா, ஜுனைத் சித்திக், முஹம்மது ஜோஹைப் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (எ)

# சிம்பாவேயுடன் ரி- 20 போட்டி இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு, ஒக. 29

சிம்பாவே அணிக்கு எதிரான இலங்கையின் ரி - 20 குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாவே சுற்றுப்பயணத்துக்கான இலங்கை கிரிக்கெட் அணியின் இருபதுக்கு 20 ஓவர் தொடருக்கான குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றுப்பயணத்துக்காக சரித் அசலங்க தலைமையிலான 17 பேர் கொண்ட குழாம் பெயரிடப்பட்டுள்ளதுடன், இதில் அறிமுக வீரர்களான விஷேன் ஹெலம்பகே மற்றும் கமில் மிஷார ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

பதும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ், குசல் ஜனித் பெரேரா, நுவனிது பெர்னாண்டோ, கமிந்து மெண்டிஸ், தசுன் ஷானக, துனித் வெல்லாலகே, சாமிக்க கருணாரத்ன, மஹீஷ் தீக்ஷன, துஷான் ஹேமந்த, துஷ்மந்த சமீர, பினுர பெர்னாண்டோ, நுவான் துஷார மற்றும் மதீஷ பத்திரண ஆகியோரும் குழாமில் அடங்கியுள்ளனர்.

இலங்கை அணியின் சிம்பாவே சுற்றுப்பயணம் இன்று முதலாவது ஒருநாள் போட்டியுடன் ஆரம்பமாகவுள்ள அதே நேரத்தில் ரி - 20 தொடர் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி தொடங்கவுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்துப்பாத்தியில்...

கூடுகள் புதிதாக கண்டறியப்பட்டன. இதனால், அங்கு கண்டறியப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 177ஆக அதிகரித்தது.

இதேபோன்று, நேற்றைய தினம் 6 மனித எலும்புக்கூடுகள் புதைகுழியிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட எலும்புக்கூடுக ளின் எண்ணிக்கை 164ஆக உயர்ந்துள் ளது.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் நீதிமன்றத்தின் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## பட்டதாரிகள்...

நீதித்துறை நடவடிக்கைகள் நிறைவடைந்ததும் உடனடியாக வர்த்தமானி வெளியிடப்படும். இதன்மூலம் பட்டதாரிகள், ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

வேலையற்ற பட்டதாரிகள் கூட்டு சங்கத்தின் பிரதிநிதிகளுடன் கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

ஏற்கனவே, அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளபடி - தேவைக்கேற்ப ஏனைய பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன், ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான வயது வரம்பை திருத்துவதற்கும் வயது வரம்பை நீட்டிப்பதற்கும் தற்போதுள்ள அனைத்து ஆசிரியர் வெற்றிடங்களுக்கும் உடனடியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கும் இதன்போது இணக்கம் எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மாகாண...

அதுவே தவறு. அறிக்கையை தாமதப்படுத்தியவர்களே தவறிழைத்தார் கள். எல்லை நிர்ணய குழு ஒன்றை மீண்டும் நியமித்தால் மாகாண சபைகள் தேர்தலை இன்னும் 3 ஆண்டுகளுக்கு நடத்த முடியாத நிலைமை ஏற்படும்.

அரச அதிகாரிகள் மற்றும் மாகாண ஆளுநர்களின் நிர்வாகத்தை காட்டிலும் அரசியல்வாதிகளின் நிர்வாகம் நூற்றுக்கு நூறு சதவீதம் சிறந்தது. அரசியல்வாதிகளால் இடம்பெறும் ஊழல் மோசடிகளை தடுக்க முடியும். அரச அதிகாரிகள், ஆளுநர்களால் இடம்பெறும் ஊழல் மோசடிகளை எவராலும் தடுக்க முடியாது. மீளாய்வு குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திலும் சிக்கல் காணப்பட்டது. தேர்தலை பிற்போடு வதற்காகவே எல்லை நிர்ணய குழு நியமிக்கப்படும். தேர்தலை பிற்போட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளவர்கள் குழுவை சவாலுக்கு உட்படுத்துவார்கள் - என்றும் தெரிவித்தார். (ஐ)

## நீதியின்...

எடுக்க வேண்டும், செம்மணி உட்பட இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட சகல மனிதப் புதைகுழிகளுக்கும் சர்வதேச விசாரணை வேண்டும் என்பன உட்பட 9 விடயங்களை வலியுறுத்தி ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்தக் கையெழுத்துப் போராட்டம் கடந்த 23ஆம் திகதி முதல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டது. தாயக செயலணி அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டம் செம்மணியில் ஆரம்பமானது. நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அதே இடத்தில் நிறைவுற்றது.

வடக்கு, கிழக்கின் சகல மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கையொப்பமிட்டுள்ளனர் என்று தாயக செயலணி அமைப்பின் வடக்குக்கான இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவித்துள்ளார். (ஐ)

## செல்வச்சந்நிதி...

அவர்களே ஏற்றிருந்தனர்.

யாழ்ப்பாணத்தின் 15 பிரதேச செயலகங்களையும் சேர்ந்த உதவி தேவைப்படும் 111 ஜோடிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது. பயனாளிகளை தெரிவு செய்யும் பணிகளை யாழ். பிரதேச செயலர் ச. சுதர்சன், யாழ். வணிகர் கழக தலைவர் இ. ஜெயசேகரன் ஆகியோர் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர் தம்பதியரின் இந்தச் செயலுக்கு பல தரப்பினரும் பாராட்டுகளை தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரணில்...

மருத்துவமனையில் சிகிச்சை பெறவோ சுதந்திரம் உள்ளது என்று மருத்துவர் ருக்ஷன் பெல்லன தெரிவித் துள்ளார். அத்துடன், அவரின் உடல் நிலை முன்னேறி வருவதாகவும் குறிப்பிட்டார்.

பொது நிதியை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, கடந்த செவ்வாய்க்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார். மருத்துவ காரணங்களை காட்டியே அவருக்கு பிணை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொக்குத்...

தொடர்பில் உறவினர்கள் அடையாளம் காட்டுவதற்கான விளம்பரங்கள் காணாமல் போனோர் பணிமனையால் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன என்றும் இது தொடர்பான அறிக்கைகளை நீதிமன்றுக்கு சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் தேவை எனவும் கோரப்பட்டது.

இதற்கு அமைவாக குறித்த வழக்கு நவம்பர் 6 ஆம் திகதிக்கு நீதிவானால் ஒத்திவைக்கப்பட்டது.

பின்னணி

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி 2023 ஜூன் மாதம் 29ஆம் தேதி அடையாளம் காணப்பட்டது. குடிதண்ணீர் விநியோகத்துக்காக குழாய் பொருத்துவதற்காக கிடங்கு வெட்டிய போது இந்தப் புதைகுழி வெளிப்பட்டது. ஜூலை 6ஆம் திகதி அகழ்வு பணிகள் ஆரம்பமாகின. 52 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட நிலையில் அகழ்வு பணி நிறைவுக்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இ.போ.ச...

முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வேறு சில கோரிக்கைகளை முன்வைத்துமே அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் உட்பட பருத்தித்துறை, காரைநகர் ஆகிய சாலைகளும் பணிப்புறக்கணிப்பால் இயங்கவில்லை. அத்துடன், பேருந்து நிலையங்கள் முன்பாக போராட்ட கோஷங்களை வலியுறுத்தி பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இதேபோன்று, வவுனியா மற்றும் வடக்கின் இதர மாவட்டங்களிலும் இ. போ. ச. பேருந்துகள் இயங்கவில்லை. திடீர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதனிடையே, அனைத்துத் தரப்பினரின் கருத்துகளின் அடிப்படையிலேயே கூட்டுநேர அட்டவணை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பி. ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார்.

இணைந்த நேர அட்டவணை மூலம் அரசாங்கம் இலங்கை போக்குவரத்து சபையை கலைக்க முயற்சிப்பதாக ஐக்கிய தொழிற்சங்க அழைப்பாளர் ஆனந்த பாலித குற்றஞ்சாட்டியுள்ளார். (ஐ)

# ரணிலின் அரசியல் எதிர்காலம் நீதிமன்றில் முடிவுக்கு வந்தது

## அமைச்சர் லால்காந்த சொல்கிறார்

கொழும்பு; ஓக. 29

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை கோரிய போது நீதிமன்றில் அவரின் சட்டத்தரணிகள் கூறிய காரணங்கள் அவரின் அரசியல் எதிர்காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளன", என்று விவசாய அமைச்சர் கே. டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ரணிலின் சட்டத்தரணிகள் அவரின் உடல்நிலை குறித்து முன்வைத்த உண்மைகள் ரணிலுக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்பதைக் குறிக்கிறது. ரணில் கைது செய்யப்பட்டபோது கூட்டு எதிர்க்கட்சியாக ஒன்றுசேர்ந்தவர்களே நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம்.

"நாட்டுக்கு உண்மையிலேயே அரசியல் தலைமை தேவைப்படும்போது அவர்களால் தங்களை ஒன்றிணைக்க முடியாதது அவமானகரமானது", என்றும் கூறினார். (ஐ)

# தம்பிலுவில் மயானத்தில் நேற்றும் அகழ்வு பணிகள்



கல்முனை, ஓக. 29

தம்பிலுவில் மயானத்தில் நேற்றும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் எவையும் கைப்பற்றப்படவில்லை என்று தெரியவருகிறது.

பிள்ளையான் குழுவின் இனியபாரதியின் சகாவின் வாக்குமூலத்தின் அடிப்படையில் நேற்று அம்பாறை - திருக்கோவில் - தம்பிலுவில் மயானத்தில் இரண்டாம் கட்டமாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிவான் திருமதி தெசீபா ரஜீவன் முன்னிலையில் இந்த அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த அகழ்வு பணியின்போது, 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கருணா - பிள்ளையான் அணியின் முக்கியஸ்தரான இனியபாரதியின் சகாவான காரைதீவை சேர்ந்த சந்தேகநபர் கைவிலங்கிடப்பட்டு சம்பவ இடத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். இவர் தற்போது அரச சாட்சியாக மாறியுள்ளார்.

கடந்தகாலத்தில் திருக்கோவிலில் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்தை சேர்ந்த சிம் விற்பனை முகவரான சீலன் என்பவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டு இந்தப் பகுதியில் புதைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இதையடுத்து, இந்த மயானத்தில் கடந்த ஜூலை 31ஆம் திகதியும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போதும் எதுவும் கிடைக்கவில்லை. இந்த நிலையில், இனியபாரதியின் மற்றொரு சகாவின் வாக்குமூலத்துக்கு அமைய தம்பிலுவில் மயானத்தில் இரண்டாம் கட்டமாக நேற்று அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# குடிதண்ணீரை பெறுவதற்கு கிளிநொச்சி மக்கள் சிரமம்

கிளிநொச்சி, ஓக. 29

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி பிரதேச செய லர் பிரிவுகளின் கிராமங்களில் குடிதண்ணீரை பெறுவதில் மக் கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரி வில் அக்கராயன் ஐயனார் குடி யிருப்பு, கெங்காதரன் குடியிருப்பு, இன்மாஸ் நகர், கோணாவில் ஆகிய கிராமங்க ளில் வறட்சி நிலவுகிறது.

இதனால், அந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீரை பெறு வதில் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளனர்.

இதனைவிட வருடம் முழுவதும் குடிதண்ணீர் நெருக் கடியை எதிர்கொள்ளும் பிர தேசமாக பூநகரி காணப்படுகிறது. இங்கு, பத்துக்கும் அதிகமான கிராம அலுவலர் பிரிவுகளில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

நிலவும் கடும் வறட்சியால் கால்நடைகளும் நீரின்றி அலைகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். (ஐ)

## வேலைநிறுத்த...

குணசேன எச்சரித்துள்ளார்.

அத்துடன், "தொழிற்சங்கங்கள் முன்வைத்த பெரும்பாலான கோரிக்கைகள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே, வேலை நிறுத்தம் நியாயமற்றது அரசாங்கத்தை சிரமப்படுத்தும் ஒரே நோக்கத்துடன் தொழிற்சங்க நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது", என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## சகல...

முறையைப் பின்பற்றவில்லை என்று அமைச்சர் ஏ. எச். எம். எச். அபயரத்ன கூறியுள்ளார்.

பொது ஊழியர்களுக்கு பொது நிதியில் ஊதியம் வழங்கப்படுவதால் சம்பளம் மற்றும் மேலதிக நேரக்கொடுப்பனவு முறையாகக் கணக்கிடப்பட வேண்டும்.

இந்தச் செயல்பாட்டில் துல்லியம் மற்றும் பொறுப்புணர்வைப் பேணுவதில் கைரேகை பதிவு இயந்திரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியர்கள் குறித்து ஐ.நா. கவலை!

கொழும்பு, ஓக. 29

மியான்மரைச் சேர்ந்த ரோஹிங்கியா அகதிகள் குழுவை இலங்கையில் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது குறித்து இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளது

இதன்படி இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி மார்க்-ஆண்ட்ரே பிராஞ்ச் இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார்.

2024 டிசெம்பரில், 116 ரோஹிங்கியாக்கள் கொண்ட குழு கடல் வழியாக இலங்கைக்கு வந்து, பின்னர் முல்லைத்தீவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மார்க்-ஆண்ட்ரே பிராஞ்ச் ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்களை மீட்டு மனிதாபிமான உதவிகளை வழங்கியதற்காக அரசாங்கத்தையும் இலங்கை கடற்படையையும் பாராட்டிய அவர்,அரசாங்கத்துடனான நீண்டகால ஒப்பந்தத்தின்படி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையகத்தை அணுகவும், பதிவு செய்யவும் அதிகாரிகளை வலியுறுத்தினார்.

மியான்மருக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள ரோஹிங்கியா மக்கள் ஏற்கனவே உள்ள மோசமான சூழ்நிலைகள் மேலும் மோசமடைவதை எதிர்கொள்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## வடக்கு-கிழக்கில் அதிகாரப்பகிர்வுடன் கூடிய சமஷ்டி அரசியலமைப்பை இயற்றவேண்டும்!

### ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு தமிழரசு கடிதம்

யாழ்ப்பாணம், ஓக. 29

**இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் தூதரகத் தலைவர்களுக்கு இலங்கை தமிழரசுக் கட்சி நான்கு அம்சங்கள் அடங்கிய கடிதத்தை அனுப்பியுள்ளது.**

வடக்கு-கிழக்கில் விரிவான அதிகாரப்பகிர்வுடன் கூடிய சமஷ்டி அரசியலமைப்பை இயற்றவேண்டும் என்றும் அதில் கோரப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு 57ஆவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 57,1 தீர்மானம் வரும் செப்ரெம்பர் மாதம் காலாவதியாக இருப்பதை குறிப்பிட்டுள்ள இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக சில முக்கியமான கவலைகளை முன்வைப்பது கட்சியின் கடமை என தெரிவித்துள்ளது.

அக் கடிதத்தில், யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப்பாத்தியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு பரிந்துரைப்பதை உறுப்பு நாடுகள் தீவிரமாக பரிசீலிக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், சர்வதேச மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றோடு இனப்படுகொலை மற்றும் அதற்கான நோக்கத்தை சுட்டும் ஆதாரங்களை சேகரிப்பதும் பொறுப்புக்கூறல் திட்டத்தின் ஓர் அங்கமாக விரிவுபடுத்தப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ரோம் சட்டத்தில் கையெழுத்திட்டு அங்கீகரிக்க இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும், மீண்டும் நிகழாமல் தடுக்க தமிழ் மக்களுடன் புதிய அரசியலமைப்பிற்கான உரையாடலை தொடங்கி, வடக்கு-கிழக்கில் விரிவான அதிகாரப்பகிர்வுடன் கூடிய சமஷ்டி அரசியலமைப்பை இயற்றவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

உடனடி நடவடிக்கையாக, மாகாண சபைத் தேர்தல்களை மேலும் தாமதமின்றி நடத்துவதற்கான வற்புறுத்தலையும் தமிழரசுக் கட்சி தனது கடிதத்தில் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ரணிலுக்கு ஆதரவான போராட்டம்

## புலனாய்வு அமைப்புக்களிடம் சிக்கியுள்ள அரசியல்வாதிகள்!

கொழும்பு, ஓக. 29

கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு அருகில் கூட்டத்தை ஏற்பாடு செய்து நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிட்ட 20 இற்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை புலனாய்வு அமைப்புகள் தெளிவாக அடையாளம் கண்டுள்ளன.

கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான பொது நிதியை தவறாகப் பயன்படுத்தியதாக வழக்கு விசாரணைக்கு வந்தபோது இந்தப் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், குற்றப் புலனாய்வுத்துறைக்கு, குறித்த அரசியல்வாதிகள் பற்றிய தகவல்களை அனுப்ப புலனாய்வு அமைப்புகள் செயல்பட்டு வருவதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அரசியல்வாதிகளில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் மற்றும் தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் அடங்குவர்.

கொழும்பு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து பேருந்துகளைப் பயன்படுத்தி இந்தக் குழுக்கள் கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டதாகவும், அவர்களுக்காக பணம் செலவழித்தவர்களை அவர்கள் அடையாளம் கண்டு வருவதாகவும் புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன. (அ)

## இ.போ.சவின் போராட்டத்துக்கு நாமல் ராஜபக்ஷவே காரணம்!

### போக்குவரத்து ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 29

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமையே, இலங்கை போக்குவரத்துச் சபை பணியாளர்களால் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக, அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கப் பிரதான செயலாளர் சேபால லியனகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின், இலங்கை போக்குரத்து சபை ஊழியர்களின் அடிப்படை வேதனம் அதிகளவு உயர்த்தப்பட்டது.

குறைந்தபட்ச ஊழியருக்கும் 50,000 ரூபாவை விட அதிகமாக வழங்கப்பட்டது.இதுபோன்ற நிலைமை முன்னர் இருந்ததில்லை. அதேசமயம், அரச ஊழியர்களுக்குக் கிடைக்கும் அனைத்து உரிமைகளும் இலங்கை போக்குவரத்து ஊழியர்களுக்கும் வழங்கப்படுகின்றன. அதனை பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்த பேருந்து பயண நேர அட்டவணையை பயன்படுத்தி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த தொழிற்சங்கப் போராட்டத்திற்கு நாமல் ராஜபக்ஷவே காரணம்.

நாமல் தொழில்சங்கத் தலைவர்களை நெலும் மாவத்தைக்கு அழைத்து போராட்டம் செய்யுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ அவர்களே, இந்த அரசாங்கத்தை மாற்றுவது சுலபம் என்று நினைக்காதீர்கள். உங்கள் வாழ்நாளில் இந்த அரசாங்கத்தை மாற்ற முடியாது. ஏனெனில், இந்த அரசாங்கத்தின் திட்டங்களை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்-என்றார். (அ)

## ஜயக்கொடி, சமரசிங்க, பிமல் மீது ஏன் இன்னும் சட்டம் பாயவில்லை?

### தயாசிறி ஜயசேகர கேள்வி

கொழும்பு, ஓக. 29

எதிர்க்கட்சிகளுக்கு மாத்திரமின்றி ஆளுந்தரப்பில் குற்றமிழைப்பவர்களுக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அமைச்சர்களான குமார ஜயக்கொடி, வசந்த சமரசிங்க, பிமல் ரத்நாயக்க உள்ளிட்டோருக்கு எதிராக முறைப்பாடளிக்கப்பட்டுள்ள போதிலும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றில் கலந்து கொண்டபோது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவதற்கு சிறந்த சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் எடுக்கவேண்டிய அரசியல் தீர்மானங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நாம் செயற்படுவோம்.

நீதிமன்ற வளாகத்தில் ஒன்று கூடிய ஆதரவாளர்கள் எவரும் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக பேசவில்லை. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கவுமில்லை.

அவ்வாறிருக்கையில் அவர்களுக்கெதிராக எவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்? எதிர்க்கட்சிகள் மீதுள்ள அச்சத்தினாலேயே அனைவரையும் முடக்குவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

முடிந்தால் மக்களை ஒன்று திரட்டுமாறு சவால் விடுத்தனர். அதனை செய்த பின்னர் தற்போது ஒன்று கூடியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முயற்சிக்கின்றனர். மக்கள் தாமாகவே நீதிமன்ற வளாகத்தில் ஒன்று கூடினர்.

மாறாக யாரும் அவர்களை திட்டமிட்டு அழைக்கவில்லை. அதனாலேயே அரசாங்கம் அச்சமடைந்துள்ளது. யார் எதைக் கூறினாலும் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பிற்கு அனைவரும் மதிப்பளிக்கவேண்டும்-என்றார். (அ)

## தேசிய சுகாதார அறிவியல் நிறுவனத்தின் பணிப்பாளராக மருத்துவர் நந்தகுமாரன்!

யாழ்ப்பாணம், ஓக. 29

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய மருத்துவர் கனகராஜா நந்தகுமாரன், இடமாற்றம் பெற்று களுத்துறை தேசிய சுகாதார அறிவியல் நிறுவனத்தின் பணிப்பாளராக தனது புதிய பொறுப்பை ஏற்கவுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள பல்வேறு சுகாதார நிறுவனங்களில் முக்கிய பதவிகளில் பணியாற்றிய அனுபவமிக்கவர் இவராவர்.

முன்னதாக, வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி 'பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் என பல பதவிகளில் பணியாற்றியவர்.

சுகாதார நிர்வாக துறையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் கடமை புரிந்து 10 ஆண்டுகளுக்கு மேல் சிரேஷ்ட மருத்துவ நிர்வாகியாக பணியாற்றியுள்ளார். (அ)



## கொழும்பின் காணி பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 29

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தின் காணிக்கான பெறுமதி அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது, இது 11.4 சதவீத அதிகரிப்பு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குடியிருப்பு காணிக்கான பெறுமதி 14.4 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. அதேநேரம், வர்த்தகம் தொடர்பான காணிகளுக் கான பெறுமதி 11.5 சதவீதமாகவும், கைத்தொழில் துறைசார்ந்த காணிகளுக்கான பெறுமதி 8.4 சதவீத மாகவும் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org